Find us on facebook/tamilmirror   Follow us on tamilmirror   epaper/tamilmirror.lk

www.tamilmirror.lk


தமிழ் Mirror

THURSDAY, JULY 21, 2021

வியாழக்கிழமை ஜூலை 21,2022 | ஒளி: 08 கதிர் 054 | பக்கம்:08 | நகரப்பதிப்பு | FREE

8ஆவது நிறைவேற்று அதிகாரங்கொண்ட ஜனாதிபதி வாக்கெடுப்பில்

# ரணில் வெற்றி



- மக்கள் ஆணையே இன்றி இருந்தார்
- மக்கள் பிரதிநிதிகளே ஆணை வழங்கினர்
- வைத்தியசாலையில் இருந்து வந்து வாக்களிப்பு
- இருவர் கைத்தாங்கலாக வந்து வாக்களிப்பு
- இரு தமிழ் எம்.பிக்கள் புறக்கணிப்பு

ரணில்- 134
டலஸ்- 82
அனுர- 03
செல்லுபடியற்றது- 04

தொடர்ச்சி P3

## விலைபோன எம்.பிக்கள்



பா.நிரோஸ்

ஜனாதிபதி பதவிக்கான இரகசிய வாக்கெடுப்பின் போது பாராளுமன்ற உறுப்பினர்கள் விலைபோயுள்ளனர். இதனை எவராலும் மறுக்க முடியாத. இந்த பாராளுமன்றத்துக்கு மக்கள் ஆணை இல்லை. எனவே பாராளுமன்றத்தின் ஊடாக ஸ்தாபிக்கப்படும் எந்தபோர் அரசாங்கத்துக்கும் ஆயுள் குறைவு என தெரிவித்த தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க, விரைவாக பொதுத்தேர்தலுக்கு செல்வது அவசியம் எனவும் தெரிவித்தார்.

தொடர்ச்சி P12

## சூழ்ச்சிக்கு முற்றுப்புள்ளி வைக்க போட்டியிட்டேன்



பா.நிரோஸ்

சூழ்ச்சியான அரசியல் கலாசாரத்தை நிறைவு செய்வதற்காகவே தான் ஜனாதிபதி பதவிக்கான வாக்கெடுப்பில் போட்டியிட்டதாகக் கூறும் பாராளுமன்ற உறுப்பினர் டலஸ் அழகப்பெரும, அரசியல் கலாசாரம் சீரழிந்துள்ளது, அதன் மீதான நம்பிக்கையை கட்டியெழுப்புவது அனைவரதும் பொறுப்பாகும் என்றார்.

தொடர்ச்சி P12

## கவலையில்லை மகிழ்ச்சியே



பா.நிரோஸ்

பாராளுமன்ற உறுப்பினர் டலஸ் அழகப்பெருமவை ஜனாதிபதி வேட்பாளராக தான் முன்மொழிந்தமைக்காக ஐக்கிய மக்கள் சக்தி என்ற ரீதியில் தாம் ஒருபோதும் கவலைப்பட போவதில்லை என தெரிவித்த எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ, இதனால் தான் மகிழ்ச்சியும், பெறுமையும் அடைவதாகத் தெரிவித்தார்.

தொடர்ச்சி P12


## புதிய ஜனாதிபதிக்கு செந்தில் வாழ்த்து



முழுச் செய்தி P5

## இலங்கையுடன் விரைவில் பேச்சு

### ஐ.எம்.எப் நிர்வாகப் பணிப்பாளர் தெரிவிப்பு



இலங்கை தற்போது பாரிய அளவிலான எரிபொருள், உணவு மற்றும் பிற அத்தியாவசியப் பொருட்களின் பற்றாக்குறையை எதிர்நோக்கி வருவதாகவும், இலங்கையுடனான நிதி மீட்புப் பேச்சுக்களை முடிந்தவரை விரைவாக முடிக்க முடியும் என சர்வதேச நாணய நிதியம் நம்பிக்கை கொண்டிருப்பதாகவும் சர்வதேச நாணய நிதியத்தின் நிர்வாகப் பணிப்பாளர் கிறிஸ்டலினா ஜோர்ஜீவா தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P12

## ரணிலுக்காக தூங்கவில்லை



பா.நிரோஸ்

ஜனாதிபதி பதவிக்கான இரகசிய வாக்கெடுப்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவாக வாக்களிக்க எவருக்கும் பணம் வழங்கப்படவில்லை என தெரிவித்த பாராளுமன்ற உறுப்பினர் ஹரின் பெர்னாண்டோ,

தொடர்ச்சி P12

இறுதி இலக்கத்தின் படி

## இன்று முதல் எரிபொருள் விநியோகம் ஆரம்பம்

வாகன இலக்கத்தகட்டின் இறுதி இலக்கத்தின் அடிப்படையில் நாடளாவிய ரீதியிலுள்ள இலங்கை பெற்றோலியக் கூட்டுத் தாபனத்தின் எரிபொருள் நிரப்பு நிலையங்கள் ஊடாக இன்று (21) முதல் எரிபொருள் விநியோகம் இடம்பெறும் என்று எரிசக்தி அமைச்சு அறிவித்துள்ளது.

தொடர்ச்சி P12



## இடைக்கால ஜனாதிபதியான ரணில் பதவி விலக வேண்டும்

கோட்டாபய ராஜபக்ஷ பதவி விலக வேண்டும் என வலியுறுத்திய வேளையில், ரணில் விக்கிரமசிங்கவும் பதவியில் இருந்து வெளியேற வேண்டும் என்பதே எமது கோரிக்கையாக இருந்தது. ஆகவே இடைக்கால ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்ட ரணில் விக்கிரமசிங்க பதவி விலக வேண்டுமென காலி முகத்திடல் போராட்டக்காரர்கள் மீண்டும் வலியுறுத்தியுள்ளனர்.

தொடர்ச்சி P12

## வாரத்தின் 3 நாட்கள் மட்டுமே பாடசாலை

மறு அறிவித்தல் விடுக்கப்படும் வரை ஒவ்வொரு திங்கள், செவ்வாய் மற்றும் வியாழக்கிழமைகளில் மாத்திரம் பாடசாலைகள் செயற்பட வேண்டும் என்று, கல்வி அமைச்சு, நேற்று (20) அறிவித்தது.

அமைச்சின் விசேட அறிக்கையிலேயே இவ்விடயம் குறிப்பிடப்பட்டதுடன், பாடசாலைகள் செயல்படாத புதன் மற்றும் வெள்ளிக்கிழமைகளில் ஒன்லைன் மூலம் கற்றல் மற்றும் கற்பித்தலை முன்னெடுக்குமாறும் அமைச்சு அறிவித்துள்ளது.

தொடர்ச்சி P12



## மறுத்தது இந்தியா

இலங்கை ஜனாதிபதியை தெரிவு செய்வதற்காக இலங்கை பாராளுமன்றத்தில் நடைபெறும் வாக்களிப்பு தொடர்பாக இலங்கையில் உள்ள அரசியல் தலைவர்கள் மீது செல்வாக்கு செலுத்தும் நோக்குடன் இந்தியாவிலிருந்து அரசியல் ரீதியான அழுத்தம் வழங்கப்பட்டதாக ஆதாரமற்றதும் ஊகங்களின் அடிப்படையிலும் வெளியாகியிருக்கும் ஊடக அறிக்கைகள் தொடர்பாக நாம் அறிந்துள்ளோம் என இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகராலயம் அறிவித்துள்ளது.

தொடர்ச்சி P12

வெளிநாட்டு

## தபால் கட்டணம் அதிகரிக்கும்

எம்.எஸ்.எம். ஹனீபா

எதிர்வரும் ஒகஸ்ட் மாதம் முதலாம் திகதி முதல், வெளிநாட்டு தபால் சேவை கட்டணத்தை அதிகரிக்கவுள்ளதாக, தபால் மா அதிபர் ரஞ்ஜித் ஆரியரத்ன தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P12



## சபைக்கு வெளியே பதவிப்பிரமாணம்

8ஆவது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்ட ரணில் விக்கிரமசிங்க, பாராளுமன்றத்துக்கு வெளியில் வைத்து, புதிய ஜனாதிபதியாக பிரதம நீதியரசர் ஜயந்த ஜயசூரிய முன்னிலையில், இன்று (21) காலை சத்தியப்பிரமாணம் செய்துக்கொள்ளவுள்ளார்.

புதிய பாதையில் பயணிப்பதற்காக

## வாருங்கள் வந்து ஒன்றிணையுங்கள்

### பெயர் குறிப்பிட்டு அழைத்தார் ஜனாதிபதி

பா.நிரோஸ்

நாட்டை மீட்க பாராளுமன்றத்தில் ஒன்றிணைந்து புதிய பாதையில் பயணிப்பதற்கு பிரதான எதிர்க்கட்சி உள்ளிட்ட எதிர்க்கட்சிகளுக்கு அழைப்பை விடுத்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, இனியும் பிளவுபட்டு செயற்பட முடியாது எனவும் தெரிவித்தார்.

தொடர்ச்சி P12



## பண்டாரநாயக்க சிலையை நெருங்குவதற்கு தடை

### 50 மீற்றர் சுற்றுவட்டாரத்துக்குள் நுழைய முடியாது

கொழும்பு, காலி முகத்திடலில் உள்ள முன்னாள் பிரதமர் எஸ்.டபிள்யூ.ஆர்.டி. பண்டாரநாயக்கவின் சிலை அமைந்துள்ள இடத்திலிருந்து 50 மீற்றர் சுற்றுவட்டாரத்துக்கு எந்த நபரும் உள்நுழைவதற்கு தடை விதித்து கோட்டை நீதவான் நீதிமன்ற நீதவான் திலின கமகே, நேற்று (20) கட்டளையிட்டார்.

தொடர்ச்சி P12

எரிபொருளுக்கான தேசிய பாஸ்

## யாழில் QR கோர்ட் விற்பனை

வி.நிதர்ஷன், எம்.றொசாந்த்




எரிபொருளுக்கான தேசிய பாஸ் நடைமுறைப்படுத்தப்படவுள்ள நிலையில், பாஸை அடையாள அட்டை போன்றும், கீ டேக் போன்றும் செய்து கொடுத்தும் கட்டணம் அறவிட்டு வருகின்றனர்.

தொடர்ச்சி P12



## ஸ்திரமானவுடன் பேச்சு தொடரும்

இலங்கை எதிர்கொள்ளும் இன்றைய பொருளாதார மற்றும் அரசியல் நெருக்கடி நிலைமை இந்தியாவிற்கும் நல்லதொரு படிப்பினையாக கருத வேண்டும். எவ்வாறு இருப்பினும் இலங்கையில் புதிய அரசாங்கம் அமைந்தவுடன் பொருளாதார மீட்சி குறித்து கவனம் செலுத்தப்படும் என இந்திய வெளிவிவகாரத்துறை அமைச்சர் எஸ். ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P12



## ரூ.172 மில். பெறுமதியான கஞ்சா யாழில் சிக்கியது

யாழ்ப்பாணம், காரைநகர் பழைய கசுரினா கடற்கரைக்கு அப்பால் கடற்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றிவளைப்பின் போது இரண்டு சந்தேக நபர்களுடன் சுமார் 172 மில்லியன் ரூபாய் பெறுமதியான கஞ்சாவை இலங்கை கடற்படையினர் கைப்பற்றியுள்ளனர்.

தொடர்ச்சி P12

# விலைபோன...

பாராளுமன்றத்தில் நேற்று (20) ஜனாதிபதி தெரிவுக்கான இரகசிய வாக்கெடுப்பில் வெற்றிபெற்ற ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு வாழ்த்துத் தெரிவித்து சபையில் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். இதன்போது தொடர்ந்து உரையாற்றிய அவர்,

பாராளுமன்றத்தின் ஊடாக தெரிவு செய்யபட்டுள்ள புதிய ஜனாதிபதி நாட்டுக்காக சேவையாற்ற வேண்டும் என வாழ்த்துவதாகவும், பாராளுமன்றில் எதிர்தரப்பு ஒன்று தோற்றம் பெற்றுள்ளதை விளங்கிக்கொள்ள முடிகிறது. ஆனால் இந்நிலைமையில் மாற்றம் வேண்டும் என்பது தேர்தல் முடிவுகள் ஊடாக உணர்த்தப்பட்டுள்ளது என்றார்.

வேட்புமனு தாக்கல் செய்யப்பட்ட போது முன்னொருபோதும் இல்லாத மாறுபட்ட தன்மையை அவதானிக்க முடிந்தது. டலஸ் அழகபெருமவை எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ முன்மொழிய அதனை ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் தவிசாளர் அமைச்சர் ஜி.எல் பீரிஸ்

வழிமொழிந்தார். அதேபோல் ஐக்கிய தேசிய கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவை சபை முதல்வர் தினேஷ் குணவர்தன முன்மொழிய ஸ்ரீ லங்கா பொது ஜன பெரமுன அல்லாத மனுஷ நாணயக்கார வழிமொழிந்தார்.

இரகசிய வாக்கெடுப்பு முடிவுகளைக் கண்டு வியப்படையவோ, சோர்ந்துபோவதற்கு ஒன்றுமில்லை. நாட்டு மக்களின் எதிர்பார்ப்பை பாராளுமன்றம் நிறைவேற்றியிருப்பதாக எவராவது கருதினால் அதுவொரு மாயை. பாராளுமன்றத்துக்கும் நாட்டு மக்களுக்கும் இடையில் வெறுப்பும், எதிர்ப்பும் தோற்றம் பெற்றுள்ளது எனடறபலடஇ

பிரதமர் பதவிக்கு சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன, தமிழ் தேசிய கூட்டமைப்பின் உறுப்பினர் சுமந்திரன் ஆகியோரின் பெயர்கள் பரிந்துரைக்கப்பட்டதோடு, ஜனாதிபதி, பிரதமர் பதவிகளை பெண் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு வழங்குவது தொடர்பிலும் ஹக்கீம் எம்மிடம் தெரிவித்தார். இதுவொரு சிறந்த முன்னுதாரணம், இப்படி ஓர் அரசாங்கம் அமைந்தால் அதில் அமைச்சுப் பதவிகளை ஏற்க நாம் தயாராக இருப்பதாக அறிவித்திருந்தோம். அதேபோல் அரசாங்கம் 6 மாதங்களுக்கானதாக இருக்க வேண்டும் எனவும் நாம் வலியுறுத்தினோம் என்றார்.

# சூழ்ச்சிக்கு...

ஜனாதிபதி பதவிக்கான இரகசிய வாக்கெடுப்பில் வெற்றிப்பெற்ற ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு வாழ்த்துத் தெரிவித்து சபையில் உரையாற்றிய டலஸ், நாட்டின் முன்னேற்றத்துக்காக மேற்கொள்ளப்படும் வேலைத்திட்டங்களுக்கு நேசக்கரம் நீட்டுவதாகவும், சுதந்திரம் அடைந்ததற்கு பின்னர் தற்போது நாடு பெரும் நெருக்கடியான காலக்கட்டத்தை எதிர்கொண்டுள்ளது என்றார்.

அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டிய காலகட்டம் இதுவென்றும், ஜனாதிபதி வேட்பாளராக தன்னை முன்மொழிந்த எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ, வழிமொழிந்த ஜீ.எல். பீரிஸ் உள்ளிட்டோருக்கும் நன்றியை தெரிவித்தார்.

குணமடைந்த நாட்டுக்கு எழுந்து நிற்க முடியும், ஆனால் நோயினால் பாதிக்கப்பட்டுள்ள நாடு எழுந்து நிற்க முடியாது. இலங்கை சுதந்திரமடைந்தது முதல் மக்கள் இறைமையைக் காட்டிக்கொடுக்கும், ஊழல் அரசியல் கலாசாரத்துக்கு முற்றுப்புள்ளி வைக்கவே தான் போட்டியிட்டதாகவும் தெரிவித்தார்.

# கவலையில்லை...

ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்ட ரணில் விக்கிரமசிங்கவுக்கு வாழ்த்துத் தெரிவித்து சபையில் உரையாற்றிய எதிர்க்கட்சி தலைவர், ஜனாதிபதி ஒருவர் மக்களின் வாக்குகள் மூலமாகவே தெரிவு செய்யப்படுகிறார். வரலாற்றில் முன்னொருபோதும் இல்லாத வகையில் 69 இலட்ச வாக்குகளைப் பெற்றிருந்த முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மக்களின் எதிர்ப்பால் இராஜினாமா செய்துள்ளார் என்பதை பாராளுமன்றத்தில் உள்ள 225 பேரும் நினைவில் கொள்ள வேண்டும் என்றார்.

அரசிலமைப்புக்கு அமைய புதிய அரசாங்கம் செயற்பட வேண்டும். நாட்டுக்குள் காட்டுச் சட்டம் அமல்படுத்த முடியாது. இதனாலேயே டலஸ் அழகப்பெரும வேட்பாளராக முன்மொழியப்பட்டார். எமக்கு கணக்குகள் நன்கு தெரியும். நாட்டில் புதிய அரசியல் கலாசாரம் ஒன்று ஏற்பட வேண்டும் என்பதால் நான் ஜனாதிபதி பதவியில் போட்டியிடாது பின்வாங்கினேன். இதனை பலர் பல விதமாக அர்த்தம் கற்பிக்க முடியும் என்றார்.

கோட்டாவின் மக்கள் ஆணையே பாராளுமன்றத்தில் செயற்படுகிறது. ஜனாதிபதி பதவிக்கான வாக்கெடுப்பில் இது மறந்துபோகலாம். நாட்டு மக்களுக்கு தேவையான எரிபொருள், சத்துணவு இல்லை எனவும், மூன்று வேளை உணவை உட்கொண்டுவந்த மக்கள் தற்போது ஒருவேளை மாத்திரமே உணவை உட்கொள்கிறார்கள் எனவும் தெரிவித்தார்.

அரசியல் மறுமலர்ச்சியொன்று நாட்டில் ஏற்பட்டே ஆக வேண்டும். அதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமைதாங்குவார் என நான் நம்புகிறேன். டலஸ் அழகப்பெருமவை ஜனாதிபதி வேட்பாளராக முன்மொழிந்ததையிட்டு நாம் மகிழ்ச்சியும், பெருமையும் அடைகிறோம். இந்தத் தீர்மானத்துக்காக நாம் ஒருபோதும் கவலையடைவதில்லை எனவும் தெரிவித்தார்.

# இன்று முதல்...

செவ்வாய் மற்றும் சனிக்கிழமைகளில் 0,1,2 ஆகிய இறுதி இலக்கங்களுக்கும் வியாழன் மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் 3,4,5 ஆகிய இலக்கங்களுக்கும் 6,7,8,9 ஆகிய இறுதி இலக்கங்களுக்கு திங்கள், புதன் மற்றும் வெள்ளி ஆகிய தினங்களில் எரிபொருள் வழங்கப்படும் என அமைச்சு அறிவித்துள்ளது. மோட்டார் சைக்கிள்களுக்கு ரூ.1500, ஓட்டோக்களுக்கு ரூ.2000, கார்கள், வான் ஆகியவற்றுக்கு ரூ.7000 என்ற அடிப்படையில் எரிபொருள் வழங்கப்படவுள்ளது. அதற்கமைய 3,4,5 இறுதி இலக்கங்களைக் கொண்ட வாகனங்களுக்கு இன்றையதினம் எரிபொருள் வழங்கப்படும் என்று எரிபொருள் நிலைய உரிமையாளர் சங்கத்தின் தலைவர் குமார ராஜபக்ஷ, நேற்று (20) தெரிவித்தார். இதேவேளை, தேசிய எரிபொருள் அனுமதிச்சீட்டின் படி எரிபொருள் விநியோகத்தை முன்னோடித் திட்டமாக 21 ஆம் திகதி முதல் 4 நாட்களுக்கு கொழும்பு மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட எரிபொருள் நிரப்பு நிலையங்களில் நடைமுறைப்படுத்த அமைச்சு தீர்மானித்துள்ளது. அதன்பின்னர் நாடளாவிய ரீதியில் 25ஆம் திகதி முதல் தேசிய எரிபொருள் அனுமதிச்சீட்டு முறைமை நடைமுறைப்படுத்தப்படும் என்று எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்தார். பாதுகாப்புப் படைகள், தேசிய இளைஞர் படையணி, தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் ஆகியவற்றுடன் எரிசக்தி அமைச்சும் இணைந்து எரிபொருள் நிரப்பு நிலைய பணியாளர்கள் மற்றும் பொது மக்களுக்கு இந்த முறைமை குறித்த தொழில்நுட்ப நிபுணத்துவத்தை வழங்குவதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

# இலங்கையுடன்...

டோக்கியோவில் இடம்பெற்ற நிகழ்வு ஒன்றில் உரையாற்றிய அவர், இலங்கையில் உள்ள மக்களின் நல்வாழ்வில் சர்வதேச நாணய நிதியம் அதிக அக்கறை கொண்டுள்ளதாகவும், இலங்கையின் நெருக்கடி நிலைமைகளை சமாளிக்கவும், நெருக்கடிகளில் இருந்து மீளவும் ஐ.எம்.எப் ஒத்துழைப்புக்களை பெற்றுக்கொடுக்கும் எனவும் தெரிவித்துள்ளார். ஜப்பான் டோக்கியாவில் இடம்பெற்றுவரும் மாநாடொனில் அவர் இந்த கருத்துக்களை பகிர்ந்துகொண்டுள்ளார்.

# இடைக்கால ஜனாதிபதியான...

பொது மக்களின் விருப்பத்திற்கு மாறாக ஜனாதிபதி நியமனம் செய்யப்பட்டுள்ளதால் அவர் பதவி விலக வலியுறுத்தி அமைதியான முறையில் போராட்டம் தொடரும் எனவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

பாராளுமன்றத்தில் மக்களின் விருப்பத்திற்கு மாறாக ஒரு முடிவை எடுத்துள்ளது. இது மக்கள் ஆணைக்கு மாறானது, ராஜபக்ஷர்களினால் தான் ரணிலும் ஆட்சிக்கு அமர்த்தப்பட்டுள்ளார். எனவே, ரணில் விக்கிரமசிங்கவுக்கும் ஊழல் முறைமைக்கும் எதிராக எமது அமைதியான போராட்டங்கள் தொடருமென போராட்டக்காரர்கள் தெரிவித்துள்ளனர்.

அரசியல் நெருக்கடிக்கு மத்தியில் புதிய ஜனாதிபதியாக ரணில் விக்கிரமசிங்க தெரிவாகியுள்ள நிலையில், காலி முகத்திடல் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள போராட்டக்காரர்கள் நேற்று (20) காலை ஜனாதிபதி செயலகத்திற்கு முன்பாக சத்தியாக்கிரக போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# வாருங்கள் வந்து...

பாராளுமன்றத்தில் நேற்று (20) நடைபெற்ற ஜனாதிபதி பதவிக்கான இரகசிய வாக்கெடுப்பில் வெற்றிபெற்ற பின்னர் சபையில் உரையாற்றும்போதே ரணில் விக்கிரமசிங்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

சபாநாயகரும் நானும், 1973ஆம் ஆண்டு ஒன்றாக அரசியல் பயணத்தை ஆரம்பித்திருந்தோம். எனவே, தற்போதைய சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன முன்னிலையில் ஜனாதிபதியாக நான் தெரிவு செய்யப்பட்டுள்ளமை மகிழ்ச்சியளிக்கிறது. பாராளுமன்றத்தில் கடந்த 45 வருடங்களாக இருக்கிறேன். எனது வாழ்க்கை இந்த பாராளுமன்றத்திலேயே இருக்கிறது. முன்னாள் ஜனாதிபதி பிரேமதாஸ கொலை செய்யப்பட்டதன் பின்னர் இடைக்கால ஜனாதிபதி ஒருவரை தெரிவு செய்ய 1993ஆம் ஆண்டும் பாராளுமன்றத்தில் டி.பி.விஜயதுங்க போட்டிகள் எதுவுமின்றி ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டார். இதன்போது பாராளுமன்றத்தில் இருந்த 15 எம்.பிக்கள் தற்போதும் பாராளுமன்றத்தில் இருக்கின்றனர் என்றார்.

எனக்காக செயற்பட்ட அனைவருக்கும் நன்றிகள். இதற்கு இணையாக வாக்கெடுப்பில் கலந்துகொண்ட அனைவருக்கும் நன்றிகள். நாடு எந்தளவு மோசமான நிலையில் இருக்கிறது என்பது நமக்கு தெரியும். இளைஞர், யுவதிகள் மாற்றத்தையே கோருகிறார்கள். மக்களும் எம்மிடமிருந்து பழைய அரசியல் கலாசாரத்தை எதிர்பார்க்கவில்லை. பாராளுமன்றத்தில் அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும் என்பதையே மக்கள் எதிர்பார்க்கிறார்கள் எனவும் தெிவித்தார்.

இதேவேளை ஜனாதிபதி வேட்பாளர்களான டலஸ் அழகப்பெரும, அநுரகுமார திஸாநாயக்க எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ, முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராபஜக்ஷ, ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் தலைவர் மைத்திரிபால சிறிசேன, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி, பாராளுமன்ற உறுப்பினர் விக்னேஸ்வரன் உள்ளிட்ட அனைவரும் ஒன்றிணைந்து புதிய பாதையில் பயணிக்க தான் அழைப்பு விடுப்பதாகவும் தெரிவித்தார்.

48 மணித்தியாலங்கள் நாம் பிளவுபட்டிருந்தோம். இனியும் பிளவுபட்டிருக்க முடியாது. அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும் எனவும் தெரிவித்தார். பாராளுமன்ற கட்டட வளாகத்தில் ஜனாதிபதியாக பதவிப் பிரமாணம் செய்துக்கொள்வதற்கு தனக்கு வாய்ப்பளிக்க வேண்டும் எனவும் ஜனாதிபதி இதன்போது சபாநாயகரிடம் கோரிக்கை விடுத்தார்.

# ரணிலுக்காக...

ரணிலுக்கு ஆதரவைத் திரட்டுவதற்காக இரவு முழுவதும் தான் உறங்கவில்லை எனவும் தெரிவித்தார். பாராளுமன்ற வளாகத்தில் வைத்து நேற்று (20) ஊடகவியலாளர்களிடத்தில் கருத்துத் தெரிவித்த அவர், ரணிலுக்கு ஆதரவளிக்க வேண்டுமென எவருக்கும் நாம் பணம் வழங்கவில்லை. அவ்வாறு பணம் வழங்குவதற்கும் நாட்டில் பணமில்லை என்றார். சர்வகட்சி அரசாங்கம் ஒன்றை அமைப்பதற்கு அனைவருக்கும் ஜனாதிபதி அழைப்பு விடுத்துள்ளார். குறிப்பாக நாட்டை தற்போதைய நெருக்கடி நிலைமைகளில் இருந்து 6 மாதங்களுக்குள் மீட்க முடியாது. புதிய அரசாங்கத்தின் ஆயுட்காலம் எவ்வளவு என்பது தொடர்பில் நாம் பாராளுமன்றத்தில் கலந்துரையாடித் தீர்மானம் ஒன்றை எட்டவேண்டும் எனவும் தெரிவித்தார்.

# மறுத்தது...

இந்த ஊடக அறிக்கைகள் முழுக்க முழுக்க பொய்யானதென நாம் திட்டவட்டமாக மறுக்கின்றோம். சிலரது கற்பனையின் தோற்றப்பாடாகவே இவ்வாறான அறிக்கைகள் அமைகின்றன என்றும் இன்று (20) பிற்பகல் அறிக்கையொன்றை விடுத்து தெரிவித்துள்ளது.

ஜனநாயக வழிமுறைகள், நிறுவனமயப்படுத்தப்பட்ட அமைப்புகள் மற்றும் அரசியலமைப்பு விதிகள் ஆகியவற்றுக்கு அமைவாக தமது அபிலாஷைகளை நனவாக்க விரும்பும் இலங்கை மக்களுக்கு இந்தியா ஆதரவளிப்பதாகவும் இன்னொரு நாட்டின் உள்விவகாரங்கள் மற்றும் ஜனநாயக நடவடிக்கைகளில் தலையிடுவதில்லை என்றும் மீண்டும் வலியுறுத்தி கூறப்படுகின்றது என்றும் அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# வாரத்தின் 3 நாட்கள்...

திங்கட்கிழமை (25) முதல் பாடசாலைகள் திறக்கப்பட்டதன் பின்னர், பாடசாலை செயற்பாடுகளை முன்னெடுக்குமாறும் இடையூறுகள் ஏற்படாத வகையில் கல்வி நடவடிக்கைகளைத் தொடருமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

2022 ஆம் ஆண்டுக்கான முதல் பாடசாலை தவணை செப்டம்பர் 7 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளதுடன், இரண்டாம் மற்றும் மூன்றாம் தவணைகளின் காலம் பின்னர் அறிவிக்கப்படும் என்று அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

மாணவர்கள் சரியான நேரத்தில் பாடசாலை செல்வது கட்டாயமாகும் எனவும் ஏற்றுக்கொள்ளக்கூடிய காரணங்களுக்காக அவர்கள் சரியான நேரத்தில் பாடசாலைக்கு வர முடியாவிட்டால் அவர்கள் சிரமப்படக்கூடாது என அமைச்சு அறிவித்துள்ளது.

பாடசாலைகள் நடைபெறும் மூன்று நாட்களிலும் பாடத்திட்டங்களை உள்ளடக்கிய நேர அட்டவணையை உருவாக்க வேண்டும் எனவும் அமைச்சு அறிவுறுத்தியுள்ளது.

# பண்டாரநாயக்க சிலையை...

கோட்டை பொலிஸாரினால் விடுக்கப்பட்ட கோரிக்கையை பரிசீலத்த பின்னரே நீதவானால் இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

சில நபர்கள், பண்டாரநாயக்க சிலைக்கு சேதம் விளைவிக்க உள்ளதாக, தமக்கு தகவல் கிடைத்துள்ளது என்று கோட்டை பொலிஸாரால் மன்றில் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது.

அந்த சிலையைச் சுற்றியுள்ள 50 மீற்றர் சுற்றளவுக்குள் எந்த நபரும் உள்நுழைவதைத் தடுக்கும் வகையில் தடை உத்தரவை பிறப்பிக்குமாறு பொலிஸாரால் கோரிக்கை விடுக்கப்பட்டது. அதற்கமைய அறிக்கையையும் பொலிஸாரின் கோரிக்கையையும் பரிசீலித்த நீதவான் திலன கமகே, தடை உத்தரவை பிறப்பித்தார்.

# யாழில் QR கோர்ட்...

யாழில் உள்ள ஒருவர், QR கோட்டினை வாகன திறப்புக்களில் மாட்டி விட கூடியவாறாக கீ டேக் வடிவில் செய்து கொடுக்கின்றார். அதற்காக அவர் 600 ரூபாயையும் அறவீடு செய்கின்றார்.

அதேபோன்று, மற்றுமொருவர், அடையாள அட்டை போன்று QR கோட்டினை வடிவமைத்து கொடுக்கின்றார். அதற்காக அவர் 300 ரூபாயை அறவீடு செய்கின்றார்.

# தபால் கட்டணம்...

நாட்டில் நிலவும் எரிபொருள் நெருக்கடி காரணமாக, நாட்டுக்கான விமானங்களின் சேவைகள் வரையறுக்கப்பட்டுள்ளதாலும் மற்றும் இடைநிறுத்தப்பட்ட காரணத்தினாலும் இத் தீர்மானமெடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, அமெரிக்கா, நெதர்லாந்து, இஸ்ரேல் மற்றும் ரஷ்யா ஆகிய நாடுகளுக்கான தபால் பொருட்களை ஏற்கும் நடவடிக்கைகள் தொடர்ந்தும் இடைநிறுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ரூ.172 மில்....

சந்தேகத்திற்கிடமான படகொன்றிலிருந்து சுற்றிவளைப்பின் போது நேற்று முன்தினம் (19) சுற்றிவளைத்த போது, அப்படக்கிலிருந்து சுமார் 575 கிலோ 600 கிராம் நிறையுடைய 17 பொதிகளில் பொதி செய்யப்பட்ட கஞ்சா, கைப்பற்றப்பட்டது என கடற்படையினர் தெரிவித்தனர்.

கைப்பற்றப்பட்ட கஞ்சாவின் மொத்த வீதி பெறுமதி சுமார் 172 மில்லியன் ரூபாய் எனவும், சந்தேகநபர்கள் 42 மற்றும் 51 வயதுடைய யாழ்ப்பாணம் மாதகல் பகுதியைச் சேர்ந்தவர்கள் எனவும் கைப்பற்றப்பட்ட கஞ்சா, படகு மற்றும் இரு சந்தேக நபர்களும் மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக ஊர்காவற்றுறை பொலிசாரிடம் ஒப்படைக்கப்பட்டதாக கடற்படை தெரிவித்துள்ளது.

# ஸ்திரமானவுடன்...

இந்திய பாராளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் 28 கட்சிகளின் பங்குபற்றலில் சர்வகட்சி கூட்டமொன்று இந்தியாவில் நடைபெற்றது. இலங்கையின் தற்போதைய பொருளாதார நெருக்கடி குறித்து அதிக முக்கியத்துவம் கொடுத்து கலந்துரையாடப்பட்ட இந்த சர்வகட்சிக் கூட்டத்தில் இந்திய வெளிவிவகாரத்துறை அமைச்சர் எஸ். ஜெய்சங்கர் முக்கிய காரணங்கள் சிலவற்றை முன்வைத்திருந்தார்.

இலங்கை தற்போது மிக மோசமான நெருக்கடியை எதிர்கொண்டு வருகின்றது, இலங்கையின் நிலைமை குறித்து இந்தியா அதிருப்தியில் உள்ளது. இலங்கையின் நிலைமைகளை கருத்தில் கொண்டு நாமும் கற்க வேண்டிய படிப்பினைகள் பல உள்ளதாகவும் வெளிவிவகாரத்துறை அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இலங்கையின் தவறான நிருவாகம் மற்றும் ஏனைய செயற்பாடுகள் காரணமாக இந்த நெருக்கடி நிலைமை ஏற்பட்டுள்ளது என்றாலும் இந்தியாவில் இவ்வாறான நிலைமை ஏற்படாது

> **எந்த நெருக்கடி நிலைமையிலும் இந்தியாவின் முழுமையான ஒத்துழைப்பை இலங்கைக்கு வழங்கியுள்ளதாகவும், உணவு, எரிபொருள், மருந்துகள் மற்றும் ஏனைய அத்தியாவசியப் பொருட்களில் இந்தியாவைப் போன்று வேறு எந்த நாடும் இலங்கைக்கு பெற்றுக்கொடுக்கவில்லை .**

என தெரிவித்துள்ள ஜெய்சங்கர், 2019 ஆம் ஆண்டிலிருந்து இலங்கையில் ஏற்பட்டுள்ள அரசியல் கொந்தளிப்பு, பொருளாதார வீழ்ச்சி மற்றும் 2019 ஆம் ஆண்டிலிருந்து வெளிநாட்டு கையிருப்புகளில் வீழ்ச்சி போன்ற பிரச்சினைகள் இன்று இலங்கையில் தாக்கத்தை செலுத்த ஏதுவாக அமைந்துள்ளது எனக் கூறியுள்ளார்.

இலங்கை நெருக்கடியில் இருந்து மீள்வதற்கு அரசியல் ஸ்திரத்தன்மையும், ஜனாதிபதிக்கான பாராளுமன்ற வாக்கெடுப்பும் நடைபெறவுள்ளதாகவும், அத்துடன் இலங்கை கடன் வழங்குபவர்களின் கடன் மறுசீரமைப்புக்கான தேவையை அனுமதிக்க வேண்டும் என்றும் தெரிவித்துள்ள அவர், இலங்கையில் புதிய அரசாங்கம் அமைந்தவுடன் பொருளாதார மீட்சி குறித்து கவனம் செலுத்தப்படும் எனவும் கூறியுள்ளார். சர்வதேச நாணய நிதியத்துடன் பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டுள்ளனர்,அவர்கள் இணக்கப்பாட்டிற்கு வரவேண்டும் அதன் பின்னர் எவ்வாறான ஆதரவை வழங்கலாம் என நாங்கள் ஆராய்வோம் என ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

லங்கையின் முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ

இலங்கையிலிருந்து மாலைதீவுக்கும் பின்னர் சிங்கப்பூருக்கும் செல்வதற்கு இந்தியா எந்த வகையிலும் உதவி தெரிவித்துள்ள அவர், எந்த நெருக்கடி நிலைமையிலும் இந்தியாவின் முழுமையான ஒத்துழைப்பை இலங்கைக்கு வழங்கியுள்ளதாகவும், உணவு, எரிபொருள், மருந்துகள் மற்றும் ஏனைய அத்தியாவசியப் பொருட்களில் இந்தியாவைப் போன்று வேறு எந்த நாடும் இலங்கைக்கு பெற்றுக்கொடுக்கவில்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

8 ஆவது நிறைவேற்று அதிகாரங்கொண்ட ஜனாதிபதித் வாக்கெடுப்பில்

# ரணில் வெற்றி





பா.நிரோஸ்

இரு முறை ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்டு மக்கள் ஆணையுடன் ஜனாதிபதி பதவியை கைப்பற்ற முடியாமல் போயிருந்த நிலையில், பாராளுமன்ற உறுப்பினர்களின் பேராதரவுடன் இலங்கையின் 8ஆவது நிறைவேற்று அதிகாரங்கொண்ட ஜனாதிபதியாக ரணில் விக்கிரமசிங்க நேற்று (20) தெரிவு செய்யப்பட்டார்.

ஜனாதிபதி பதவிக்கான இரகசிய வாக்கெடுப்பில் தன்னுடன் போட்டியிட்ட ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் வேட்பாளரான டலஸ் அழகப்பெரும, தேசிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் அனுரகுமார திஸாநாயக்க ஆகிய இருவரையும் வீழ்த்தியே, பதில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியானார்.

இடைக்கால ஜனாதிபதியை தெரிவு செய்வதற்கான வாக்கெடுப்பில், ரணில் விக்கிரமசிங்கவுக்கு 134 வாக்குகளும், டலஸ் அழகபெருமவுக்கு 82 வாக்குகளும், அனுரகுமார திஸாநாயக்கவுக்கு 3 வாக்குகளும் கிடைத்தன. அகில இலங்கை தமிழ் காங்கிஸின் பாராளுமன்ற உறுப்பினர்களான கஜேந்திரகுமார் பொன்னம்பலம், செல்வராசா கஜேந்திரன் ஆகிய இருவரும் புறக்கணித்திருந்தனர்.

அளிக்கப்பட்ட மொத்த வாக்குகளில் நான்கு வாக்குகள் நிராகரிக்கப்பட்ட வாக்குகளாகும் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, ஜனாதிபதி பதவியை இராஜினாமா செய்ததை அடுத்து புதிய இடைக்கால ஜனாதிபதியை தெரிவு செய்யும் வாக்கெடுப்பு நேற்று (20) பாராளுமன்றத்தில் நடைபெற்றது.

ஜனாதிபதி பதவிக்கு ஒருவரை தெரிவு செய்வதற்கான இரகசிய வாக்கெடுப்புக்காக பாராளுமன்றம் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் நேற்று (20) காலை 10 மணிக்கு கூடியது. பிரதான அறிவிப்புகளை அடுத்து, வாக்கெடுப்புக்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன.

பாராளுமன்ற அமர்வை ஆரம்பித்து வைத்து அறிவிப்பை விடுத்த சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன, வரலாற்றில் முக்கியமான தருணத்தில் நாம் இருக்கிறோம். எமது நாடும், உலகமும் பாராளுமன்றத்தில் என்ன நடக்கிறது என்பதை உன்னிப்பாக அவதானித்துக் கொண்டிருக்கிறது. எனவே பாராளுமன்ற உறுப்பினர்கள் முறையாக நடந்துகொள்ள வேண்டும் எனவும் கேட்டுக்கொண்டார்.

ஜனாதிபதி வாக்கெடுப்பு இரகசிய வாக்கெடுப்பு என்பதால், வாக்குசீட்டை பாராளுமன்ற உறுப்பினர்கள் ஏனையோருக்குக் காண்பிக்கவோ அல்லது அதனைப் படம் பிடிக்கவோ கூடாது. மேலும் வாக்கு செலுத்தும் இடங்களுக்கு தொலைபேசிகளை எடுத்து வர முடியாது. தவறுதலாக எவராவது தொலைபேசியை எடுத்து வருவதாக இருந்தால், தொலைபேசியை பெற்றுக்கொள்வதற்கு இரு அதிகாரிகள் இருக்கின்றனர் என்றார்.

வாக்கெடுப்பின்போது பாராளுமன்ற உறுப்பினர்கள் தங்களது ஆசனங்களில் இருந்து எழுந்து நிற்பது அல்லது விவாதிப்பது அல்லது ஒழுங்குப் பிரச்சினைகளை எழுப்ப முடியாது எனவும் எம்.பிக்களுக்கு அறிவித்தார்.

சபாநாயகர் அறிவிப்பைப் தொடர்ந்து தெரிவத்தாட்சி அதிகாரியாகச் செயற்பட்ட பாராளுமன்ற செயலாளர் நாயகம் வாக்கெடுப்புப் பணிகளுக்கு ஒத்துழைப்பை வழங்க வேண்டும் எனவும், எவ்வாறு வாக்களிப்பது, செல்லுபடியற்ற வாக்குகள் தொடர்பில் விளக்கமளித்து சபையில் சில அறிவிப்புக்களையும் விடுத்தார். இதனை தொடர்ந்து வெற்று வாக்குப் பெட்டி பாராளுமன்ற உறுப்பினர் உறுப்பினர்களுக்குக் காண்பிக்கப்பட்டது. இதனை சில பாராளுமன்ற உறுப்பினர்கள் தங்களது தொலைபேசிகளில் படம் பிடித்துக்கொண்டதோடு, மனோ கணேசன் எம்.பி தனது ஆசனத்திலிருந்து எழுந்து வெற்றுப் பெட்டியைப் பார்வையிட்டார்.

## சபாநாயகர் வாக்களிப்பு



இதனைத் தொடர்ந்து நேற்றுக் காலை 10.25 மணியளவில் சபையில் வாக்கெடுப்பு ஆரம்பிக்கப்பட்டது. இரகசிய வாக்கெடுப்பில் முதலாவதாக சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவே வாக்களித்தார். அதனையடுத்து பதில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வாக்களித்தார்.

ஜனாதிபதி வேட்பாளர்களாக களமிறக்கப்பட்டிருந்த ரணில் விக்கிரமசிங்க, டலஸ் அழகப்பெரும, அநுரகுமார திஸாநாயக்க ஆகியோர் வாக்களிக்கும்போது சபையில் பலத்த கரகோஷங்கள் எழுப்பப்பட்டன. அதேபோல எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ, பாராளுமன்ற உறுப்பினர் சாமர சம்பத் ஆகியோருக்கும் கரகோஷங்கள் எழுப்பப்பட்டன.

## வைத்தியசாலையில் இருந்து வந்த எம்.பிக்கள்




ஜனாதிபதி தெரிவுக்கான இரகசிய வாக்கெடுப்பின்போது சுகயீனம் காரணமாக சிகிச்சைப் பெற்றுவரும் இரு பாராளுமன்ற உறுப்பினர்கள் பெரும் சிரமங்களுக்கு மத்தியில் பாராளுமன்றத்துக்கு வந்து தங்களது வாக்குகளை செலுத்தினர். மொட்டுக் கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களான சமன்பிரிய ஹேரத் சேலைன் போத்தலுடனும், டி.வீரசிங்க சக்கர கதிரையிலும் (வீல் செயார்) சபைக்கு வந்து வாக்குகளை செலுத்தினார்கள். சக பாராளுமன்ற உறுப்பினர்களும், படைக்கல சேவிதர்களும் இவர்களுக்கு வாக்கு செலுத்த உதவினார்கள்.



## கைத்தாங்கலாக வந்தவர்கள்

முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன்ஆகியோர் வயது மூப்புக் காரணமாக கைத்தாங்களாக அழைத்துவரப்பட்டு வாக்குகளை செலுத்தினார்கள்.

## புறக்கணித்த தமிழ் எம்.பிக்கள்



ஜனாதிபதியை தெரிவு செய்வதற்கான இரகசிய வாக்கெடுப்பை தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், அக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் ஆகியோர் புறக்கணித்தனர்.

## தொலைபேசிகள் பறிப்பு



வாக்களிப்பு இடங்களுக்கு பாராளுமன்ற உறுப்பினர்கள் தொலைபேசியை எடுத்து வரக்கூடாதென முன்கூட்டியே அறிவிக்கப்பட்டிருந்த நிலையில் பாராளுமன்ற உறுப்பினர்களான சார்ல்ஸ் நிர்மலநாதன், கபில ஹேரத் மறந்த நிலையில் தொலைபேசிகளை எடுத்து வந்ததால், அதனை அங்கிருந்த படைக்கலச் சேவிதர்களிடம் ஒப்படைத்துவிட்டு வாக்களித்தப் பின்னர் மீள பெற்றுக்கொண்டதையும் அவதானிக்க முடிந்தது.

## வலது ரணில், இடது டலஸ்

இடைக்கால ஜனாதிபதிக்கான இரகசிய வாக்கெடுப்பு 11.45 மணியளவில் நிறைவடைந்திருந்தது. இதனைத் தொடர்ந்து வாக்கு எண்ணும் பணிகளை மேற்பார்வையிட ஜனாதிபதி வேட்பாளர்கள் மூவரதும் பிரதிநிதிகளை தனக்கு அறிவிக்குமாறு தெரிவித்தாட்சியாக செயற்பட்ட பாராளுமன்ற செயலாளர் நாயகம் தம்மிக்க தஸநாயக்க அறிவித்தார்.

இதனைத் தொடர்ந்து ரணில் சார்பாக ஹறின் பெர்ணான்டோவும், டலஸ் அழகப்பெரும சார்பாக டிலான் பெரேரா, அநுர குமார திஸாநாயக்க சார்பாக விஜித ஹேரத் முன்னிலையில் வாக்கு எண்ணும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டன. முதலில் செல்லுப்படியான செல்லுபடியற்ற வாக்குகள்

எண்ணப்பட்டன. செலுத்தப்பட்ட 223 வாக்குகளில் 219 வாக்குகள் செல்லுபடியானதாகவும், 4 வாக்குகள் செல்லுபடியற்றதாகவும் தெரிவத்தாட்சி அதிகாரி தீர்மானித்தார்.

வேட்பாளர்களுக்கு செலுத்தப்பட்ட வாக்குகள் எண்ணும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டதைத் தொடர்ந்து தெரிவித்தாட்சி அதிகாரயான பாராளுமன்ற செயலாளர் நாயகத்தின் வலது புறமாக ரணிலுக்கு செலுத்தப்பட்ட வாக்குகளும், இடது புறமாக டலஸ்க்கு செலுத்தப்பட்ட வாக்குகளும் வைக்கப்பட்டன.

வாக்கு எண்ணப்படுவதை சபையிலிருந்த ரணில் விக்கிரமசிங்க, சஜித் பிரேமதாஸ, மஹிந்த ராஜபக்ஷ ஆகியோர் கூர்ந்து அவதானித்துக்கொண்டிருந்ததோடு, ஆளும் எதிர்க்கட்சியினருk;

ஆசனங்களில் இருந்து எழுந்து இரு பக்கங்களிலும் நின்றுக்கொண்டிருந்ததால், "ஜனாநாயகம் மீதான பாராளுமன்ற உறுப்பினர்களின் ஆர்வத்தை மதிக்கிறேன். ஆனாலும் ஆசனங்களில் அமருங்கள் என சபாநாயகர் சிரித்தப்படியே அறிவிப்பு விடுத்தார்.

செயலாளர் நாயக்கத்தின் வலது புறத்துக்கு அதிகளவான வாக்குகள் சென்றுக்கொண்டிருந்ததால் ஆளுந்தரப்பினர் மகிழ்ச்சியில் இருந்தனர். ஒரு கட்டத்தில் வாக்கு எண்ணும் பணிகளை மேற்பார்வை செய்ய ரணில் சார்பாக வந்திருந்த ஹறின் பெர்ணான்டோ ஆளுங்கட்சி பக்கம் தனது கைகளை உயர்த்தி ரணிலின் வெற்றியை உறுதி செய்தார்.

எண்ணப்பட்ட வாக்குகள் தெரிவித்தாட்சி அதிகாரியாகச் செயற்பட்டுக்கொண்டிருந்த பாராளுமன்ற செயலாளர் நாயக்கத்தால் அறிவிக்கப்பட்டது. இரகசிய வாக்கெடுப்பை இரு எம்.பிக்கள் புறக்கணிக்க செலுத்தப்பட்ட வாக்குகள் 223இல், 219 வாக்குகள் செல்லுபடியாவதாகவும், 4 வாக்குகள் செல்லுபடியற்றது எனவும் அறிவிப்பு விடுக்கப்பட்டது.

மேலும் பதில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு 134 வாக்குகளும், டலஸ் அழகப்பெருமவுக்கு 82 வாக்குகளும் அநுர குமார திஸாநாயக்கவுக்கு 3 வாக்குகளும் கிடைத்தன. பெரும்பான்மை வாக்குகளைப் பெற்ற பதில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாட்டின் 8ஆவது நிறைவேற்று அதிகாரங்கொண்ட ஜனாதிபதியாக பாராளுமன்றத்தில் நடைபெற்ற இரகசிய வாக்கெடுப்பில் தெரிவு செய்யப்பட்டுள்ளதாக செயலாளர் நாயகம் சபைக்கு அறிவித்தார்.



உடனடிச் செய்திகளைத் தமிழ் மொழியில் பெற்றுக்கொள்ள எம்மோடு இணைந்திருங்கள்
தமிழ் Mirror www.tamilmirror.lk பதிவு செய்வதற்கு
Dialog Type TM and send to 87798 Daily Rs.1/=+TAX
HUTCH Type TM and send to 2233 Monthly Rs.30/=+TAX
SLTMOBITEL Type REG TM and send to 77012 Daily Rs.1/=+TAX



கல்முனை எரிவாயு வழங்குவதில்

# முறைகேடு

**பிரதேச செயலாளரின் கவனத்துக்கு கொண்டுவரப்பட்டுள்ளது**

■ நூருல் ஹுதா உமர்

கல்முனை மாநகரில் சமையல் எரிவாயு விநியோகத்தில் முறைகேடுகள் மற்றும் அரசியல் தலையீடுகள் இருப்பதால், தமக்கு சமையல் எரிவாயு கிடைப்பதில் பாரிய இடர்பாடுகள் இருப்பதாக, கல்முனை பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்.

கல்முனை எரிவாயு விநியோகத்தில் மக்கள் பிரதிநிதிகள் சிலர் தலையிட்டு, அவர்களின் ஆதரவாளர்களுக்கும் குடும்பத்தினருக்கு வழங்கி வருவதாக பொதுமக்கள் முயையிடுகின்றனர்.

கல்முனை மாநகர பிரதேசங்களில் பிரதேச செயலகத்தையும் தாண்டி, கல்முனை மாநகர சபை உறுப்பினர்கள் சிலர், சமையல் எரிபொருளுக்கான டோக்கன்களை வழங்கி, தமக்கு வேண்டியவர்களுக்கு சமையல் எரிவாயுவை பெற்றுக்கொடுக்கின்றனர்.

இந்த வாய்ப்பானது அவர்கள் கட்சி சார்ந்தவர்களுக்கு மட்டுமே




கிடைக்கின்றது. அதிலும் சிலர் தனது நெருங்கிய குடும்பத்தினர், தீவிர ஆதரவாளர்களுக்கு முன்னுரிமை வழங்கி பங்கிடுவதால், பொதுமக்களுக்கு சமையல் எரிவாயு கிடைப்பதில் சிக்கல்கள் நிலவுகின்றன.

இந்த விடயம் தொடர்பில், கல்முனை பிரதேச செயலாளர், அரசியல்வாதிகளின் பின்னால் செல்லாமல் பொறுப்புவாய்ந்த அரச அதிகாரியாக செயற்பட்டு தேவையுடைய மக்களுக்கு கிராம சேவகர்கள், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மற்றும் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் போன்றோர்கள் ஊடாக சமையல் எரிவாயுவை ஒழுங்கான முறையில் சகலருக்கும் கிடைக்க ஆவன செய்யுமாறு, பொதுமக்கள் கேட்டுக்கொள்கின்றனர்.

## தங்கத்தை தேடி நிலத்தை தோண்டினர் நால்வர் கைது



■ கனகராசா சரவணன்

மட்டக்களப்பு, காத்தான்குடி பொலிஸ் பிரிவிலுள்ள ஆரையம்பதி, ஒல்லிக்குளம் பிரதேசத்தில் உள்ள கைவிடப்பட்ட காணி ஒன்றில் தங்கம் தேடி நிலத்தை தோண்டும் நடவடிக்கையில் ஈடுபட்ட நால்வர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

களுவாஞ்சிக்குடி விசேட அதிரடிப்படையினர் நேற்று முன்தினம் (19) நள்ளிரவு கைது செய்யப்பட்ட இவர்கள், காத்தான்குடி பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

இராணுவ புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைத்த தகவலுக்கமைய நேற்று நள்ளிரவு 11.30 மணியளவில் குறித்த பகுதியிலுள்ள ஆடைத் தொழிற்சாலை தங்கு விடுதிக்கு அருகாமையிலுள்ள கைவிடப்பட்ட காணியை களவாஞ்சிக்குடி விசேட அதிரடிப் படையினருடன் இராணுவ புலனாய்வுப் பிரிவினர் இணைந்து முற்றுகையிட்டனர்.

இதன்போது அங்கு தங்கம் இருப்பதாக நிலத்தைத் தோண்டும் நடவடிக்கையில் ஈடுபட்டுக் கொண்டிருந்த அம்பாறை பிரதேசத்தைச் சேர்ந்த இருவர் மற்றும் ஆரையம்பதி பிரதேசத்தைச் சேர்ந்த இருவர் உட்பட 4 பேரை கைது செய்தனர்.

அத்துடன், நிலத்தை தோண்ட பயன்படுத்திய மண்வெட்டி, அலவாங்கு மற்றும் சவல் போன் உள்ளிட்ட ஆயுதங்களை மீட்டு, காத்தான்குடி பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

## ரயில் மோதியதில் யானை இறப்பு



■ எப்.முபாரக்

திருகோணமலை மாவட்டத்தின் கந்தளாய், அக்போபுர பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் பயணித்த கடுகதி ரயிலில் மோதி காட்டு யானையொன்று நேற்று (20) காலை இறந்துள்ளதாக அக்கோபுர பொலிஸால் தெரிவித்தனர்.

கொழும்பிலிருந்து திருகோணமலைக்குச் சென்ற ரயிலில் அக்போபுர பகுதியில் வைத்து காட்டு யானை மோதுண்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்துள்ள யானைக்கு பன்னிரண்டு வயதிருக்கலாம் எனவும் அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

சம்பவம் தொடர்பான விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

தடைசெய்யப்பட்ட சிகரெட்டை புகைத்த

## சிறுவனுக்கு நன்னடத்தை; இளைஞர்களுக்கு அபராதம்

■ எம்.எஸ்.எம். ஹனீபா

அக்கரைப்பற்று பிரதேசத்தில் தடைசெய்யப்பட்ட சிகரெட்டை தன் வசம் வைத்திருந்து குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட நாலவருக்கு தலா 1,500 ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டுள்ளதோடு, 14 வயதுச் சிறுவன், சிறுவர் நன்னடத்தை அதிகாரியிடம் அக்கரைப்பற்று நீதவான் நீதிமன்றால் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

அக்கரைப்பற்று பொலிஸாருக்கு கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில் பதுர்நகர் பிரதேசத்தில் சிறுவனும் 4 இளைஞர்களும் தடைசெய்யப்பட்ட சிகரெட் புகைத்துக் கொண்டிருந்த வேளையில் கைது செய்யப்பட்டனர்.

சந்தேக நபர்களை, அக்கரைப்பற்று நீதவான் நீதிமன்ற நீதவான் எம்.எச்.எம். ஹம்ஸா முன்னிலையில், நேற்று முன்தினம் (19) ஆஜர் செய்து போது, 04 இளைஞர்களுக்கு தலா 1,500 ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டுள்ளதோடு, சிறுவனை சிறுவர் நன்னடத்தை அதிகாரியிடம் ஒப்படைக்குமாறு உத்தரவிட்டுள்ளார்.

பாராளுமன்றத்தில்

## கோட்டாவின் கிளைகள் எஞ்சியுள்ளன

■ ஒலுமுதீன் கியாஸ் ஷாபி, எப்.முபாரக், ஹஸ்பர்

கோட்டபாய துரத்தப்பட்டாலும் பாராளுமன்றத்தில் அவரின் கிளைகள் எஞ்சியுள்ளன என திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஹரூப் தெரிவித்தார்.

இது தொடர்பில் நேற்று (20) அவர் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடுகையில், "சஜித் பிரேமதாஸஜனாதிபதிக்கான வேட்புமனுவை வாபஸ் வாங்க எடுத்த தீர்மானமானது பல தரப்புக்களுடன் பல கட்டமாக நடத்திய பேச்சுவார்தையின் பின்னர் எடுக்கப்பட்ட கடினமான முடிவாகும்.

"நாடு எதிர்கொண்டுள்ள நெருக்கடி நிலைமையை சீராக்க



நாமும் சில தியாகங்களை செய்ய வேண்டும்.இது அரசியல் இலாபம் தேடும் நேரமல்ல. அரசியல் ஸ்திரத்தன்மையை ஏற்படுத்தி, சர்வகட்சி அரசாங்கத்தை ஸ்தாபித்து, குறுகிய காலத்துக்குள் தேர்தல் ஒன்றுக்குள் செல்ல, வரலாற்று முக்கியத்துவமிக்க முன்மாதிரியை சஜித் செய்துள்ளார்.

"கோட்டபாய துரத்தப்பட்டாலும் பாராளுமன்றத்தில் அவரின் கிளைகள் எஞ்சியுள்ளன. நாம் ஏற்றுக்கொள்ளாவிட்டாலும் பாராளுமன்றத்துக்குள் இன்னும் பொதுஜன பெரமுனவே பெரும்பான்மை.

"ஆகவே, 45க்கு மேற்பட்ட உறுப்பினர்களை கொண்டு ஐக்கிய மக்கள் சக்தியால் தனியே நின்று அரசியல் ஸ்திரத்தன்மையை ஏற்படுத்த முடியாது என்பதே உண்மை.

"பொருளாதார நெருக்கடிகளுக்கு குறுகிய நெடுங்கால தீர்வுகளை காண ஐக்கிய மக்கள் சக்தி தயாராக உள்ளது" என்றார்.



கிளிநொச்சி தனியார் காணியில்

# வெடிபொருட்கள் மீட்கப்பட்டன

■ சுப்பிரமணியம் பாஸ்கரன்

கிளிநொச்சி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கனகாம்பிகைக்குளம் பகுதியில் உள்ள தனியார் காணியிலிருந்து வெடிபொருட்கள் மீட்கப்பட்டுள்ளன.

துப்பரவு பணியில் காணி உரிமையாளர் ஈடுபட்ட நிலையில் இவை அடையாளம் காணப்பட்டன. இது தொடர்பில் காணி உரிமையாளரால் கிளிநொச்சி பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டது.



இதனையடுத்து, விசேட அதிரடிப்படையினரால் நேற்று முன்தினம் (19) இவை மீட்கப்பட்டுள்ளன.

இதில் மோட்டர் செல்கள், மகசின்கள் மற்றும் கண்ணீர் புகைக்குண்டுகள் ஆகியன மீட்கப்பட்டுள்ளதாகவும், அவற்றை பாதுகாப்பாக செயலிழக்கச் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் கிளிநொச்சி பொலிஸார் தெரிவித்தனர்.



இலங்கைக்கு கடத்திய 575 கிலோகிராம்

## கஞ்சாவுடன் இருவர் கைது


■ எஸ்.தில்லைநாதன்

கடல்மார்க்கமாக இலங்கைக்குக் கடத்தப்படவிருந்த 575 கிலோகிராம் கேரளா கஞ்சாவை மீட்ட இலங்கைக் கடற்படையினர், இருவரைக் கைதுசெய்துள்ளனர்.

கடற்படையினருக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் நேற்று முன்தினம் (19) நள்ளிரவு முன்னெடுக்கப்பட்ட விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கையின் போது இவர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

மாதகல் பகுதியைச் சேர்ந்த இருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டனர் எனவும் சந்தேகநபர்களிடமிருந்து கைப்பற்றப்பட்ட கேரளா கஞ்சா மற்றும் படகு என்பன காங்கேசன்துறை கடற்படை முகாமுக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளன.

சந்தேகநபர்களையும் கஞ்சா மற்றும் படகையும், காங்கேசன்துறை பொலிஸார் ஊடக நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.



## நட்சத்திர ஆமை

யாழ்ப்பாணம், அரியாலை கிழக்கு பகுதியிலே அரியவகை நட்சத்திர ஆமையொன்றை, நேற்று முன்தினம் (19) பிரதேசவாசிகள் மீட்டுள்ளனர். (படங்கள் – வி.நிதர்ஷன்)

## மாந்தை கிழக்கிலும் யூரியா உரம் வழங்கல்

■ சுப்பிரமணியம் பாஸ்கரன்

முல்லைத்தீவு மாவட்டத்தின் மாந்தை கிழக்கு பிரதேசத்தில் இம்முறை சிறுபோக நெற்செய்கையை மேற்கொள்ளும் விவசாயிகளுக்குரிய யூரியா உரம் பகிர்ந்தளிக்கப்பட்டு வருகின்றது.

முதல் கட்டமாக கிடைக்கப்பெற்ற 27,000 கிலோகிராம் யூரியா உரமே, மாந்தை கிழக்க்கு பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள பாண்டியன்குளம் கமநல சேவைகள் நிலையத்தால் இவ்வாறு பகிர்ந்தளிக்கப்பட்டு வருகின்றது.

மாந்தை கிழக்கு கமநல சேவைகள் திணைக்களத்தின்கீழ் உள்ள பகுதிகளில் நெற்செய்கையை மேற்கொள்ளப்பட்டுள்ள விவசாயிகளுக்கு ஏக்கர் ஒன்றுக்கு 20 கிலோகிராம் யூரியா வீதம் வழங்கப்பட்டுகின்றது.



ஊடக, தகவலை மேம்படுத்தல்

## புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்துப்பட்டது



■ வி.நிதர்ஷன்

ஊடக மற்றும் தகவல் கல்வியறிவை மேம்படுத்தும் நோக்கிலான புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றில் ஊடகம் மற்றும் தகவல் கல்வியறிவு மையமும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகமும் கைச்சாத்திட்டன.

இந்த நிகழ்வு, யாழ். பல்கலைக் கழக சபா மண்டபத்தில் நேற்று முன்தினம் (19) நடைபெற்றது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் சார்பில் துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜாவும், ஊடகம் மற்றும் தகவல் கல்வியறிவு மையத்தின் சார்பில் வைத்தியக் கலாநிதி எம்.ஏ.வை. அரபாத்தும் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டனர்.

விழிப்புணர்வுடனான தகவல் நுகர்வின் அடிப்படையில் செம்மையான தகவல் பரிமாற்றத்துக்கு, பல்கலைக்கழக ஊடகக் கற்கைகள் துறை மாணவர்களைத் தயார்படுத்தும் செயற்பாடுகளை, இப்புரிந்துணர்வு ஒப்பத்தம் உள்ளடக்கியுள்ளது.

இந்த ஒப்பந்தப்படி, இலங்கையில் தற்போது காணப்படும் ஊடக மற்றும் தகவல் கல்வியறிவில் வெளித்தெரியும் இடைவெளிகளையும், குறைபாடுகளையும் ஆய்வு செய்யவும் இடமளிக்கப்படுள்ளது.

ஆய்வின் பேறாக, இலங்கைக்குப் பொருத்தமான ஊடக மற்றும் தகவல் கல்வியறிவு பற்றிய முன்மொழிவுகளும் வெளியிடப்படவுள்ளன.

ஒப்பந்தம் கைச்சாட்டும் நிகழ்வில், கலைப்பீடப் பீடாதிபதி பேராசிரியர் கே.சுதாகர், ஊடகக் கற்கைகள் துறைத் தலைவர் பேராசிரியர் சி ரகுராம், கலைப்பீடப் பிரதிப் பதிவாளர் திருமதி அனுஷா சிவனேஸ்வரன், ஊடகக் கற்கைகள் துறை விரிவுரையாளர்கள் மற்றும் சுயாதீன ஊடக, தகவல் கல்வியறிவு ஆலோசகர் கலாநிதி எம். சி. ரஸ்மின் ஆகியோர் கலந்துகொண்டிருந்தனர்.

புதிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க

# நாட்டை கூடிய விரைவில் வழமைக்கு கொண்டுவருவார்

## அமைப்பாளர் ஆனந்தகுமார் வாழ்த்து

நாட்டின் 8ஆவது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாக பாராளுமன்ற வாக்கெடுப்பில் தெரிவுசெய்யப்பட்டுள்ள ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு கட்சியின் இரத்தினபுரி மாவட்ட அமைப்பாளர் எஸ்.ஆனந்தகுமார் வாழ்த்துத் தெரிவித்துள்ளார்.

நாடு எதிர்கொண்டுள்ள கடுமையான பொருளாதார நெருக்கடிக்கு விரைவாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தீர்வை வழங்கி நாட்டை மீட்டெடுப்பார் என்பதுடன், மக்கள் தமது இயல்பு வாழ்க்கையை நெருக்கடிகளின்றி கொண்டுசெல்லவும் தற்போதைய வாழ்க்கை செலவை குறைக்கவும் ஜனாதிபதி விரைவாக நடவடிக்கையெடுப்பார் எனவும் அவர் கூறினார்.



ரணில் விக்கிரமசிங்கவை நாட்டின் ஜனாதிபதியாக தெரிவுசெய்ய பாராளுமன்றத்தில் வாக்களித்த அனைத்து எம்.பிகளுக்கு நன்றியை தெரிவிப்பதுடன், நாட்டின் எதிர்காலம் மற்றும் தொலைநோக்கு கொள்கையை கொண்டுள்ள ஒரு சரியான ஜனாதிபதி பல தசாப்தங்களின் பின்னர் தற்போதுதான் உருவாகியுள்ளார்.

கடந்த பொதுத் தேர்தலில் ஐ.தே.கவுக்கு மூன்று இலட்சம்வரையான வாக்குகளை மாத்திரம் வழங்கி மக்கள் வரலாற்று பிழையை செய்திருந்தனர். ஆனால், மீண்டும் அவர் அறியாணை ஏறியுள்ளார். மக்களை இவர்மீது முழுமையான நம்பிக்கையை கொள்ளுமாறு கோருகிறேன்.

இன்று நாடு எதிர்கொண்டுள்ள பொருளாதார மற்றும் அரசியல் நெருக்கடிக்கு தீர்வை வழங்கக் கூடிய ஒரே தவைவர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மாத்திரமே. அவரது அரசியல் அனுபவம் மற்றும் பொருளாதாரத்தை கையாளும் அனுபவங்களின் ஊடாக மாத்திரமே நாட்டை வழமைக்கு கொண்டுவர முடியும். மீண்டும் இலங்கையை சர்வதேசம் ஏற்றுக்கொள்ளும் ஒரு நாடாக ஜனாதிபதி ரணில் மாற்றியமைப்பார் எனவும் அவர் கூறியுள்ளார்.

# நாட்டை மீட்டெடுக்க துரிதமாக செயற்படுவார்

## இ.தொ.கா தலைவர் வாழ்த்து

நாட்டின் 8ஆவது ஜனாதிபதியாக பாராளுமன்ற வாக்கெடுப்பில் தெரிவுசெய்யப்பட்டுள்ள ரணில் விக்ரமசிங்கவுக்கு, இ.தொ.கா தலைவர் செந்தில் தொண்டமான் தனது வாழ்த்துகளை தெரிவித்துள்ளார்.

புதிய ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் காலத்தில் பொருளாதார நெருக்கடியில் இருந்து நாட்டை மீட்டெடுக்க துரிதமாக செயற்படுவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

மேலும் ரணில் விக்ரமசிங்க பிரதமராக பொறுப்பேற்ற இரண்டு மாதக்காலங்களில் நாட்டில் பொருளாதார பிரச்சினையை சீர்செய்வதற்காக வெளிநாட்டு உதவிகளை பெறுவதற்காக பல்வேறு நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

மலையக மக்களை பிரதிநிதித்துவப்படுத்தும் பிரதான





கட்சி என்ற அடிப்படையில், இறுதி தருணம் வரை பலகோணங்களில் கலந்துரையாடல் நடத்தியே யாருக்கு ஆதரவு வழங்குவது தொடர்பாக முழுமையாக ஆராய்து இ.தொ.கா முடிவெடுத்தது.

நாட்டை பொருளாதார நெருக்கடியிலிருந்து மீட்டெடுக்கும் மற்றும் சர்வதேச நட்புறவை கொண்ட நபர் யார் என்பதன் அடிப்படையில் இந்த முடிவு எடுக்கப்பட்டது.

இ.தொ.கா மக்களின் நலன்களை ஆராய்ந்து அதற்கு தீர்வை பெற்றுக்கொடுக்கும் வகையில்தான் எப்போதும் தீர்மானம் எடுத்துவருகிறது. அதன் அடிப்படையில் தான் ரணில் விக்ரமசிங்கேவுக்கு ஆதரவளித்துள்ளோம். நாட்டை மீட்டெடுக்க அவர் முன்னெடுக்கும் திட்டங்களுக்கு முழுமையான ஒத்துழைப்புக்களை வழங்குவோம். புதிய ஜனாதிபதியின் பயணம் வெற்றிபெற இ.தொ.கா வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கிறது.

# ஊடகவியலாளர் சுந்தரலிங்கத்தின் தந்தை காலமானார்



மலையக ஊடகவியலாளர் கே.சுந்தரலிங்கத்தின் தந்தையார் பெருமாள் கன்னிகன் நேற்று முன்தினம் (19) காலை இறைவனடி சேர்ந்தார்.

இவர் இரத்தினபுரி மாவெல தர்மயதன வீதி இல.345/11 எனும் பகுதியில் அண்மைக்காலமாக வசித்துவந்ததுடன்,

அன்னாரின் இறுதிக் கிரியை இன்று (21) மாலை 3.00 மணிக்கு இரத்தினபுரி மாவெல பொது மயானத்தில் நடைபெறவுள்ளது.



# உரம் விநியோகம்...





கேகாலை மற்றும் மொனராகலை ஆகிய மாவட்டங்களுக்கு இந்த வருடத்துக்கான பெரும்பாக செய்கைக்கான யூரியா உரம் வழங்கும் நடவடிக்கை நேற்று முன்தினம் ஆரம்பிக்கப்பட்டது.
(என்.ஆராச்சி, சுமணசிறி குணதிலக)

அக்குறனை நகரில் பாரிய நிதி செலவில்

# நவீன வர்த்தக நிலையத் தொகுதி

■ மொஹொமட் ஆஸிக்

அக்குறணை நகரில் 400 இலட்சம் ரூபாய் செலவில் நவீன முறையிலான வர்த்தக நிலைய தொகுதியை அமைப்பதற்கு, அக்குறணை பிரதேச சபை ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

நேற்று முன்தினம் (19) நடைபெற்ற மாதாந்த கூட்டத்திலேயே இது குறித்து தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அக்குறணை பிரதேச சபையின் தவிசாளர் இஸ்திஹார் இமாதுதீன் முன்வைத்த இப் பிரேரணைக்கு சபையின் ஏனைய அங்கத்தவர்கள்



ஏகமனதாக ஒத்துழைப்பு வழங்கியுள்ளனர்.

கண்டி மாவட்டத்தில் அமைந்துள்ள மிக முக்கியமான வணிக நகரமாக கருதப்படும் அக்குறணை நகரில், இவ்வாறான நவீன வர்த்தக நிலையம் ஒன்றினை நிறுவுவது மூலம் நகரின் அபிவிருத்தி துரிதப்படுவதுடன் பிரதேச சபைக்கு பிரத்தியேக வருமானத்தை பெற்றுக் கொள்ளவும் முடியும் என்றும் தவிசாளர் இஸ்திஹார் இமாதுதீன் தெரிவித்தார்.

அக்குறணை நகரில் தற்போது பஸ் தரிப்பிடம் அமைந்துள்ள சிறு வர்த்தகத் தொகுதியில் இந் நவீன வர்த்தக நிலையத்தினை நிர்மாணிக்க உள்ளதாகவும் அதன் நிர்மாணப்பணிகள் வெகு விரைவில் ஆரம்பிக்க படும் என்றும் அவர் தெரிவித்தார்.

# 1040 லீற்றர் டீசலுடன் ஒருவர் கைது

■ ராமு தனராஜா

அத்தியாவசிய சேவைகள் என கூறி 1040 லீற்றர் டீசலை லொறி ஒன்றில் பெற்றுகடகொண்ட நபரொருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

பதுளை- படல்கும்புர பகுதியைச் சேர்ந்த சந்தேகநபர், நுகர்வோர் அதிகார சபையின் அதிகாரிகளால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

27 வயதுடைய குறித்த சந்தேகநபர், பதுளை இ.போ.ச டிப்போவிலிருந்தே டீசலைப் பெற்றுள்ளமை தெரியவந்துள்ளது.

சந்தேகநபருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கவுள்ளதாக நுகர்வோர் அதிகார சபையினர் தெரிவித்துள்ளனர்.

யட்டியாந்தோட்டை பகுதியில்

# சிறுத்தைகளின் நடமாட்டம் அதிகரிப்பு

■ என்.ஆராச்சி

யட்டியாந்தோட்டை பிரதேச செயலகத்துக்குட்பட்ட பல இடங்களில் உள்ள வீடுகளில் வளர்க்கப்படும் செல்லப்பிராணிகள் மாயமாவதாக தெரிவிக்கப்படுகின்றது.

குறிப்பாக கில்ம, பெரன்னாவ, அமனாவல, வேவல்தலாவ ஆகிய பகுதிகளில் உள்ள நாய், பூனை ஆகிய செல்லப்பிராணிகள் திடீரென்று காணாமல் போவதாக பிரதேசவாசிகள் தெரிவிக்கின்றனர்.

குறித்த பிரதேசத்தில் சிறுத்தைகள் நடமாட்டம் அதிகரித்துள்ளதாகவும் இதனால் கூடுகளில் வளர்க்கப்படும் நாய்கள் கூட சிறுத்தைகளால் கூடுகளிலிருந்து இழுத்துச் செல்லப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதற்கு முன்னர் சீபொத், தெனவக்க தோட்டத்தில் இரண்டு சிறுத்தைகள் வலையில் சிக்கியிருந்த நிலையில் மீட்கப்பட்டதாக பிரதேசவாசிகள் தெரிவிக்கின்றனர்.

இந்த விடயம் தொடர்பில் புளத்கொஹூபிட்டிய வனஜீவராசிகள் அதிகாரி ஒருவரிடம் வினவியபோது, இந்த பிரதேசத்திலுள்ள அம்பான மற்றும் நாரங்கல ஆகிய வனங்களிலுள்ள சிறுத்தைகள் உணவைத் தேடி மக்களின் வாழ்விடங்களை நோக்கி வருவதாகவும் கடந்த இரண்டு வருடங்களுக்கு பிறகு, மீண்டும் இவ்வாறானதொரு சம்பவம் பதிவாகியுள்ளது என்றார்.

பெரும்பாலான தோட்டத் தொழிலாளர்களுக்கு

# கனவாகிப் போன மூவேளை உணவு

■ உமாமகேஸ்வரி

நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார சீர்கேடு காரணமாக பாதிக்கப்பட்டுள்ள இரத்தினபுரி மாவட்டத்திலுள்ள தோட்ட தொழிலாளர்கள் பல்வேறு சிரமங்களை அனுபவித்து வருவதுடன் நாளொன்றுக்கு இரண்டு வேளை உணவினை மட்டுமே உட்கொள்வதாக பலரும் கவலை தெரிவிக்கின்றனர்.

இவ்வாறு உட்கொள்ளும் உணவும் முழுமையாக கிடைக்கப்பெறுவதில்லையென சுட்டிக்காட்டப்படுகின்றது.

தோட்டப்பகுதிகளிலுள்ள கடைகளில் அத்தியாவசிய பொருட்களின் விலை பாரியளவு அதிகரித்து காணப்படுகின்றது. அத்துடன் தமிழக அரசாங்கத்தால் வழங்கப்பட்ட அரிசி உள்ளிட்ட அத்தியாவசிய உணவு பொருட்களும் முறையாக தமக்கு கிடைக்கவில்லையென தெரிவிக்கின்றனர்.

இதேவேளை இரத்தினபுரி -ஹப்புகஸ்தென்ன



பொலிஸ் பகுதியிலுள்ள தோட்டமொன்றில், தோட்ட தொழிலாளர்களுக்கு வழங்கப்படவிருந்த தமிழக அரசாங்கத்தின் நிவாரண மூடைகளில் 35 மூடைகள் காணவில்லையென தோட்ட நிர்வாகத்தினால் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. ஒவ்வொன்றும் 10 கிலோகிராம் நிறையைக் கொண்ட மூடைகளாகும்.

இதனையடுத்து, தோட்ட தொழிற்சாலையில் கடமைப்புரியும் பெரும்பான்மையின அதிகாரியொருவர் கைது செய்யப்பட்டு விசாரணை செய்யப்பட்டதையடுத்து, 50 கிலோ கிராம் அரிசி மூடைகள் மீட்கப்பட்ட போதிலும் மிகுதி அரிசி மூடைகள் இதுவரை மீட்கப்படவில்லை.

சந்தேகநபர், கடந்த 5 ஆம் திகதி இரத்தினபுரி நீதவான் முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்ட நிலையில், அவர் 14 ஆம் திகதி பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

எனினும், அவரால் திருடப்பட்ட அரிசி, இதுவரை மீட்கப்படாத காரணத்தினால் இது குறித்து இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் உப செயலாளர் எஸ். ராஜமணியின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டு, அவர் சப்ரகமுவ மாகாண பிரதி பொலிஸ் மா அதிபரின் கவனத்திற்கு கொண்டு வருவதாக தெரிவி த்துள்ளார்.



# வாகன நெரிசலால் அடிக்கடி முறுகல்

■ ஆ.ரமேஸ்

கந்தப்பளை நகரில் இயங்கும் ஐ.ஒ.சி எரிபொருள் நிரப்பும் நிலையத்திற்கு அதிகமான வாகனங்கள் எரிபொருள் நிரப்ப வருகை தருவதால் கந்தப்பளை நகரில் வாகன நெரிசல் ஏற்படுகிறது.

இதனால் சாரதிகளுக்கும் வர்த்தக நிலைய உரிமையாளர்களுக்கும் இடையில் அவ்வப்போது முறுகல் நிலை ஏற்படுகின்றது.

கந்தப்பளை நகரில், இருவழி போக்குவரத்து வசதி இருக்கின்ற போதிலும் எரிபொருள் விநியோகிக்கப்படும் போது, ஒரு வழி போக்குவரத்து முற்றாக தடைப்படும் நிலை உருவாகி வாகன நெரிசல் ஏற்படுகிறது.

இதனால் அவசர பயணங்களை மேற்கொள்வோர் பாரிய அசௌகரிகங்களுக்கு முகம் கொடுக்க நேரிடுகின்றது.

இராகலை நகரில் இயங்கும் சிபெட்கோ எரிபொருள் நிலையமும் கடந்த இரண்டு மாதங்களாக மூடப்பட்டுள்ளது. அதேபோல உடப்புஸ்ஸலாவை நகரிலும் எரிபொருள் நிலையத்திற்கு முறையாக எரிபொருள் கிடைப்பதில்லை மேலும் வலப்பனை நகரிலும் எரிபொருளுக்கு தட்டுப்பாடு நிலவுகிறது.

இந்த நிலையில், கந்தப்பளை நகரில் உள்ள ஐ.ஒ.சி நிரப்பு நிலையத்திற்கு மாத்திரமே இரண்டு நாட்களுக்கு ஒரு முறை முறையாக எரிபொருள் கிடைக்கின்றது.

இதன் காரணமாகவே கந்தப்பளை நகரில் வாகன நெரிசல் ஏற்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

எனவே இது தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கவனத்திற் கொண்டு, இராகலை, உடப்புஸ்ஸலாவை மற்றும் வலப்பனை நகரங்களில் இயங்கும் எரிபொருள் நிரப்பும் நிலையங்களுக்கு எரிபொருளை வழங்க நடவடிக்கை எடுக்க முன்வர வேண்டும் என கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

# புதிய ஜனாதிபதி தரவேண்டியது ஜனரஞ்சகத்தை அல்ல

பெரும் பொருளாதார நெருக்கடிக்குள் நாடு தள்ளாடிக் கொண்டிருந்தபோது, பேரம்பேசி, கோரிக்கைகளை முன்வைத்து, ஒருகுடையின் கீழ் அணிதிரளமுடியாமல், பலரும் பின்னடித்த நேரத்தில் தனியொருவனாய் நின்று, பிரதமர் பதவியை ஏற்று, ஓரளவுக்கேனும் நம்பிக்கையை ஏற்படுத்திய ரணில் விக்கிரமசிங்க, நிறைவேற்று அதிகாரம் கொண்ட 8ஆவது ஜனாதிபதியாக, மக்கள் பிரதிநிதிகளால் நேற்று (20) தெரிவுசெய்யப்பட்டார்.

மக்களால் அன்றி, மக்கள் பிரதிநிதிகளால் தெரிவு செய்யப்பட்டதாலோ? என்னவோ, பாராளுமன்ற வளாகத்திலேயே ஜனாதிபதியாக ரணில் விக்கிரமசிங்க, இன்று (21) காலை பதவிப்பிரமாணம் செய்துக்கொள்ளவுள்ளார். நேற்றைய வாக்கெடுப்பில், ரணில் விக்கிரமசிங்க 134 வாக்குகளையும், டலஸ் அழகப்பெரும 82 வாக்குகளையும் அனுரகுமார திஸாநாயக்க 3 வாக்குகளையும் பெற்றிருந்தனர்.

இந்த வாக்கெடுப்பை அகில இலங்கை தமிழ் காங்கிஸின் பாராளுமன்ற உறுப்பினர்களான கஜேந்திரகுமார் பொன்னம்பலம், செல்வராசா கஜேந்திரன் ஆகிய இருவரும் புறக்கணித்திருந்தனர். அளிக்கப்பட்ட வாக்குகளில் நான்கு வாக்குகள் நிராகரிக்கப்பட்ட வாக்குகளாகும். ஆக, வாக்களிக்கக்கூட தெரியாதவர்கள் தங்களுடைய பிரதிநிதிகளாக இருக்கின்றனர் என்பதையிட்டு மக்களே! வெட்கித் தலைகுனிய வேண்டும்.

நாடு நெருக்கடிக்குள் சிக்கித் தவிக்கிறது. ஒவ்வொரு குடிமகனும் துன்பப்பட்டுக் கொண்டிருக்கின்றான். விலையேற்றத்தால் திமிறிக்கொண்டிருக்கின்றனர். வாயையும் வயிற்றையும் இனிமேலும் இறுகக் கட்டமுடியாது என்பதை அரசாங்கம் நன்கறியும். ஆகையால், ஜனரஞ்சகமான அறிவிப்புகளை விடுத்து, மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான முயற்சிகளில் அதிரடியாக இறங்கவேண்டும்.

எரிபொருட்களின் விலை =, பஸ் கட்டணங்களில் குறைப்பு என்பதெல்லாம் எதிர்பார்த்த அளவுக்கு மக்களிடத்தில் இடம்பிடிக்கவில்லை. மின்சாரக் கட்டண அதிகரிப்புக்கான அறிவிப்பு, மக்கள் தலையில் இடிவிழுந்தாற் போலிருக்கிறது. ஆக, மக்கள் மீது இன்னுமின்னும் சுமைகளைச் சுமத்துவதாய் அமைந்துள்ளது.

ஒகஸ்ட மாதமளவில் இடைக்கால வரவு-செலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்படுமென, பிரதமராக பதவியேற்றபோது ரணில் விக்கிரமசிங்க நம்பிக்கையூட்டினார். ஒகஸ்ட் வரை காத்திருக்காமல், மக்களுக்கு நிவாரணப் பொதியை வழங்க ஆவன செய்யவேண்டும்.

பதில் ஜனாதிபதியாக இருந்தபோது. “அதிமேதகு” என்று விளித்து அழைக்கவேண்டாம். ஜனாதிபதி கொடியை இரத்துச் செய்வேன். ஒரேயொருகொடி தேசியக்கொடி ஆகிய அதிரடியான அறிவிப்புகள், மக்களிடத்தில் இடம்பிடிப்பதற்கான ஜனரஞ்சக அறிவிப்புகளாகும். ஆனால், அவையெல்லாம் மக்களின் பசியை போக்காது.

வீழ்ந்து கிடக்கும் பொருளாதாரத்தை கட்டியெழுப்பி, வேலை வாய்ப்புகளை ஏற்படுத்தி, தொழிற்சாலைகளை இயங்கச் செய்து, எரிபொருள்,எரிவாயுக்கான வரிசைகளை முழுமையாக இல்லாமற்செய்வதற்கான திட்டங்களை நடைமுறைப்படுத்தினால், அதனூடாக வேலைவாய்ப்பின்மை சதவீதம் குறையும்.

இதனூடாக. தங்களுடைய குடும்பத்துக்கான ஆகக் குறைந்த தேவையான ஒருவேளை சாப்பாட்டுக்கு வழிகிடைக்கும். அதன்பின்னர், நாட்டை அபிவிருத்தி செய்யும் வகையில் நீண்டகால வேலைத் திட்டங்களை முன்வைத்து அதன்பால் கவனத்தை செலுத்தலாம். ஆக, புதிய ஜனாதிபதி முன்னிலையில் இருப்பது ஜனரஞ்சகமல்ல, தீர்வுகளே என்பதை நினைவூட்டுகின்றோம்.


தமிழ்Mirror க்கு எழுதுங்கள்

www.tamilmirror.lk

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136



Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk






## வாழ்வியல் தரிசனம்

வசதி குறைந்த குடும்பத்தின் தலைவன், தலைவி, தங்கள் குடும்பத்தின் நிலை குறித்து, அடிக்கடி கவலைப்படுவதுண்டு. அவர்களில் எவருமே, எதிர்காலத்தில் தங்கள் நிலையில் திருப்பங்கள் வந்துவிடும் என்பது பற்றி நினைப்பதேயில்லை. எல்லா வசதிவாய்ப்புகளும் குறிப்பிட்ட நபர்களுக்கு மட்டுமானது அல்ல.

பல வறுமையான குடும்பங்களைக் கண்டிருக்கின்றோம். கெட்ட காலம் விலக, அந்தக் குடும்பத்தின் நிலையே மாறிவிடுகின்றது. இந்த நல்ல திருப்பம் தங்களுக்கு வரும் என்று, அவர்களே எதிர்பார்த்திருக்க மாட்டார்கள்.

பிள்ளைகள் படித்து நல்ல பதவிகளைப் பெறுவதும் குடும்பத் தலைவனுக்கு செய் தொழிலில் ஏற்றம் கிடைப்பதும் புதிதான சங்கதிகள் அல்ல; உலக மாற்றமே இப்படித்தான்.

வறுமை தரித்திருக்காது; செல்வமும் சென்று விடலாம். ஆனால், நேர்மை, நீதி வழியில் வாழ்பவர்களுக்கு என்றும் நல்வாழ்க்கை நிரந்தரமாகிவிடும்.

எதுவுமே செய்யாது எந்த நல்லதையும் பெற்றுவிட முடியாது. படிக்காமல் சித்திபெற முடியாது. கண்ணியம் இன்றி வாழ்வு செழிக்காது. புண்ணியம் செய்யாமல் நிம்மதி கிட்டாது. வண்ணமிகு வாழ்வு நிலைக்க, எண்ணங்களைப் புனிதமாக்குக! எல்லாமே முடியும்; பொல்லாததையும் வெல்ல முடியும்.

-பருத்தியூர் பால. வயிரவநாதன்

## கடிதங்கள்

### அறுவடைக்கு எரிபொருள் கிடைக்கவில்லை

கிளிநொச்சி, கல்மடுக்குளத்தின் கீழ் சிறுபோக பயிர்ச்செய்கையில் ஈடுபட்டிருக்கும் விவசாயிகள் தற்போது அறுவடையில் ஈடுபட்டு வருகின்றார்கள். இந்த அறுவடைக்கான எரிபொருள் வழங்கப்படாத நிலையில், பெரும் கஸ்டங்களை எதிர் நோக்கி வருகின்றனர்.

அறுவடைநடைபெற்றுவரும் நிலையில், எரிபொருள் பெறமுடியாத சூழ்நிலை நிலவுவதாகவும் கல்மடு கமக்கார அமைப்புகள் மற்றும் தருமபுரம் கமக்கார அமைப்புகள் தெரிவித்துள்ளன. அதிக விலைக்கே எரிபொருளை 1,200ரூபாவுக்கு எரிபொருள் பெறவேண்டிய அவலநிலை உள்ளது.

அத்துடன், நெல்லைக் களஞ்சியப்படுத்தும் உரப்பையைப் பெறுவதிலும் பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டு உள்ளதாகவும் கல்மடு விவசாயிகள் கவலை வெளியிட்டுள்ளனர். எனவே, உரிய நேரத்தில் எரிபொருள் பெற்றுத்தர நடவடிக்கை எடுக்க வேண்டும் எனத் தெரிவித்துள்ளனர் .

-யது பாஸ்கரன்



# அரசியல் தந்திரசாலி ரணிலின் வெற்றி!



புருஜோத்தமன் தங்கமயில்

நம்பிக்கைக் கதைகளின் புதிய அத்தியாயமாக இலங்கையின் நிறைவேற்று அதிகாரம் கொண்ட புதிய ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க இடம்பிடித்திருக்கிறார். ஐந்து தசாப்த கால அரசியல் வாழ்வைக் கொண்டிருக்கின்ற ரணில், ஜனாதிபதிக் கனவை ஒவ்வொரு நாளும் கொண்டு சுமந்தார். இரண்டு தடவைகள் ஜனாதிபதித் தேர்தலில் நேரடியாக போட்டியிட்டு தோல்வியடைந்த போதிலும், அவர் தனது கனவை அடைவதற்கான அனைத்துச் சந்தர்ப்பங்களையும் பரீட்சித்துப் பார்ப்பதற்கு தயாராக இருந்தார். அதுதான், அவரை காலம் இன்று ஜனாதிபதியாக்கியிருக்கிறது. நம்பிக்கைக் கதைகளில் புதிய நாயகனாகவும் மாற்றியிருக்கின்றது.

இலங்கை அரசியல் வரலாற்றில் ஒரு கட்சித் தலைவராக ரணில் மிக மோசமான தோல்விகளைச் சந்தித்திருக்கிறார். 1994ஆம் ஆண்டு ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைப் பதவிக்கு வந்தது முதல் 2002, 2015 ஆகிய இரு தடவைகள் மாத்திரமே பொதுத் தேர்தலில் வெற்றிபெற்று பிரதமராகும் வாய்ப்பு அவருக்கு கிடைத்திருக்கின்றது. ஏனைய சந்தர்ப்பங்களில் கௌரவ எதிர்க்கட்சித் தலைவர் என்கிற அடையாளத்தோடுதான் இருந்து வந்திருக்கிறார். 2020 பொதுத் தேர்தலில் அவரும் அவரது கட்சியும் மக்களால் என்றைக்கும் இல்லாதவாறு தோற்கடிக்கப்பட்டதோடு எதிர்க்கட்சித் தலைவர் பதவியும் பறிபோனது.. ஆனாலும், கட்சிக்கு கிடைத்த ஒரேயொரு தேசியப்பட்டியல் ஆசனத்தைப் பற்றிப் பிடித்துக் கொண்டு ஒன்றரை ஆண்டுகளின் பின்னர், பாராளுமன்றம் வந்த ரணில், திடீரென ஒருநாள் பிரதமரானார். இப்போது ஜனாதிபதியாகியிருக்கிறார். இப்போதுதான் ஜே.ஆர். ஜெயவர்த்தனவின் ஆன்மா அமைதியடைந்திருக்கும்.

ஏனெனில், நிறைவேற்று அதிகாரம் என்கிற எதேச்ச அதிகாரம் கொண்ட ஜனாதிபதி பதவி முறையை இலங்கை அரசியலில் அறிமுகப்படுத்தி, அதனை உச்ச அளவில் பிரயோகித்தவர் ஜே.ஆர். ஜெயவர்த்தன. அவர் தன்னுடைய காலத்தின் பின்னர், என்றோ ஒருநாள் அந்தப் பதவிக்கு தனது மருமகனான ரணில் வரவேண்டும் என்று விரும்பினார். அது, நிறைவேறாமல் போய்விடுமோ என்று அவரது ஆன்மா கடந்த முப்பது ஆண்டு காலமாக அங்கலாய்த்திருக்கும். ஆனாலும், தன்னுடைய பாசறையில் அரசியல் தந்திரம் பழகிய ரணில், என்ன விலை கொடுத்தாலும் அதிகாரத்தை அடைந்து காட்டியிருக்கிறார்.

ராஜபக்ஷர்களுக்கு எதிரான போராட்டத்தை மக்கள் ஆரம்பித்த போது, அதனை சாதகமாக பயன்படுத்துவது குறித்து ரணில் மிக நிதானமாக காய்களை நகர்த்தினார். ஐ.தே.க.வின் ஒற்றை உறுப்பினராக எதிர்க்கட்சி வரிசையில் உட்கார்த்திருந்தாலும், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை கொண்டு வருவது குறித்து பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியோடு சேர்ந்து கவனம் செலுத்தினார்.

ராஜபக்ஷர்களால் மக்களின் எழுச்சியை கையாள முடியாது என்ற நிலை எழுந்த போது, ரணில் தன்னுடைய அரசியல் தந்திர ஆட்டத்தை தனித்து ஆடத் தொடங்கினார். போராட்டக்காரர்கள், பௌத்த உச்ச பீடங்கள் தொடங்கி அனைத்து கட்டங்களிலும் ராஜபக்ஷர்களுக்கு எதிரான அழுத்தம் அதிகரித்த போது, சர்வகட்சி அரசாங்கம் என்கிற விடயம் பேசு பொருளானது. சர்வகட்சி அரசாங்கம் என்பது ராஜபக்ஷர்களுக்கு இடையில் பிளவுகளை ஏற்படுத்தியது. ஒவ்வொரு ராஜபக்ஷவும் தங்களது பதவியை பாதுகாப்பதற்காக மற்ற ராஜபக்ஷர்களின் பதவிகளை பலி கொடுக்கத் தயாரானார்கள். அந்த இடத்தை சரியாக பற்றிக் கொண்ட ரணில், மஹிந்த ராஜபக்ஷவிடம் இருந்த பிரதமர் பதவியை கோட்டாவினூடு கைப்பற்றினார். கோட்டா முன்னிலையில் பிரதமராக பதவியேற்ற போதிலும்கூட அவர், ராஜபக்ஷர்களுக்கு எதிரான மக்களின் எழுச்சியை தணிந்து போக விடவில்லை.

பெரும் நெருக்கடியை ரணில் தனக்கான அரசியல் விளையாட்டுக்காக கையாண்டார். பிரதமராக பொறுப்பேற்ற அவர், மக்களின் நாளாந்த வாழ்க்கைக்கான நெருக்கடியை சமாளிப்பதற்கான வாய்ப்புக்களைப் பற்றி பேசுவார் என்று பார்த்தால், நாட்டு மக்களை நோக்கி பஞ்சம் பசி தொடர்பில் எச்சரிக்கை விடுக்கத் தொடங்கினார். அது, ஒருவகையில், ராஜபக்ஷர்களின் எவர் ஒருவர் ஆட்சியில் இருந்தாலும் சர்வதேச நாடுகளோ, உதவி வழங்கும் அமைப்புக்களோ இலங்கையின் பொருளாதார நெருக்கடிக்கு உதாவது என்ற தோரணையிலானதாக இருந்தது. அந்த செய்திகள் மக்களை இன்னும் இன்னும் கோபப்படுத்தியது. அது, கடந்த ஒன்பதாம் திகதி, ஜனாபதிப் பதவியில் இருந்து கோட்டாவை ஓட வைக்கும் போராட்டமாக மாறியது. கோட்டா நாட்டை விட்டு ஓடி சென்று 14ஆம் திகதி பதவி விலகிய போது, பதில் ஜனாதிபதியாக ரணில் மாறினார்.

> அந்த வழிமுறையை சில காலத்துக்கு பின்பற்றுவதில் தவறில்லை என்பதும், அதுதான் தங்களை அரசியலில் காப்பாற்றும் என்பதுமே மஹிந்த தரப்பு ரணிலை ஜனாதிபதியாக முன்னிறுத்துவதில் முடிந்திருக்கின்றது. இன்று ராஜபக்ஷர்களும் ரணிலும் சந்தர்ப்பங்களைப் பயன்படுத்தி ஆதாயங்களை அடைந்திருக்கிறார்கள். ஆனால், போராடி மக்களின் எதிர்பார்ப்போ ஏதுமறிய திக்குத் திசையில் உழலத் தொடங்கியிருக்கின்றது

ராஜபக்ஷர்களை வீட்டுக்கு அனுப்பும் போராட்டம், ஒரு கட்டத்தில் ரணிலுக்கு எதிரானதாகவும் மாறியது. அவரை வீட்டுக்கு செல்லுமாறு கோரியது. ஆனால், அவர் எந்தக் கட்டத்திலும் அந்த முடிவை நோக்கி செல்வதற்கு தயாராக இருக்கவில்லை. தனது கனவை அடைவதற்கான இறுதிச் சந்தப்பம் இது என்பதில் அவர் கவனமாக இருந்தார். கோட்டாவை நாட்டை விட்டு அனுப்புவதில் ரணில் காட்டிய ஆர்வம் மிகப்பெரியது.

அதுபோல, கோட்டா நாட்டைவிட்டுச் சென்றதும், அவர் பாதுகாப்புத் தரப்பை கையாளத் தொடங்கிய விதம் அச்சமூட்டும் அளவுக்கு இருந்தது. அதுதான், போராட்டக்காரர்களை சற்று பின்வாங்கவும் வைத்தது. ராஜபக்ஷக்கள் இருக்கும் வரையில் போராட்டக்காரர்களை ஒரு அளவுக்கு மேல் எதிர்க்காது பின்வாங்கிக் கொண்டிருந்த பாதுகாப்புத் தரப்பு, ரணில் பதில் ஜனாதிபதி என்கிற நிலையை அடைந்ததும், முன்நோக்கி வரத் தொடங்கினார்கள். அவசர காலச் சட்டம் தொடங்கி, போராட்டத்தை அடக்குவதற்கான அனைத்து விதமான ஆணைகளையும் ரணில் எந்தவித தயக்கமும் இன்றி விடுக்கத் தொடங்கினார். போராட்டக்காரர்களை நோக்கி பாஷிஸ்டுகள் என்கிற அடையாளப்படுத்தலை அவர் திருப்பத் திரும்பச் செய்தார். ராஜபக்ஷர்களுக்கு எதிரான மக்களின் போராட்டத்தை அடக்குவதற்கு ஒருபோதும் முயலேன் என்று பிரதமராக பதவியேற்ற தருணத்தில் அறிவித்த ரணில், பதில் ஜனாதிபதியானதும், அந்தத் தோரணையை மாற்றினார். ராஜபக்ஷர்களை அகற்றப்பட்ட பின்னர், இனி தன்னுடைய களத்தில் யாருக்கும் இடமில்லை என்பது அவரது நிலைப்பாடாக மாறியது.

கடந்த காலங்களில் ராஜபக்ஷர்களுக்கு எதிராக அரசியல் செய்த ரணிலும், ரணிலுக்கு எதிராக அரசியல் செய்த ராஜபக்ஷர்களும் இன்று ஒரே அணியில் இருக்கிறார்கள். அதுவும், கடந்த பொதுத் தேர்தலில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையைப் பெற்ற ராஜபக்ஷர்கள், தேர்தலில் தோல்வியடைந்த ரணிலை ஜனாதிபதியாக்குவதற்காக பாராளுமன்றத்துக்குள் வாக்களித்திருக்கிறார்கள்.

நேற்று நடைபெற்ற வாக்களிப்பில், அவர் பெற்ற 132 வாக்குகள் என்பது செல்லும் செய்தி, ராஜபக்ஷர்களின் ஆதரவு உறுப்பினர்கள், ஒரே அணியில் இருக்கிறார்கள். அவர்கள் இப்போது ரணிலை முன்னிறுத்தியிருக்கிறார்கள். அவர்களுக்கு பொது மக்களின் போராட்டமோ, ராஜபக்ஷர்கள் மீதான கோபமோ ஒரு பொருட்டாக இல்லை.

ரணிலை இடைக்கால ஜனாதிபதியாக முன்னிறுத்துவதன் மூலம், பொது ஜன பெரமுன என்கிற கட்சியை தங்களின் கட்டுப்பாட்டில் வைத்துக் கொள்ளலாம் என்பது ராஜபக்ஷர்களின் எதிர்பார்ப்பு. ஏனெனில், இன்றைக்கு தங்களுக்கு எதிராக மக்கள் கிளர்ந்து எழுந்தாலும், நல்லாட்சிக் காலத்தில் ரணிலும் -மைத்திரியும் சறுக்கிய இடம்போன்ற சந்தர்ப்பம் மீண்டும் தங்களுக்கு கிடைக்கும் அதனைப் பிடித்துக் கொண்டு ஆட்சி அதிகார கனவை நோக்கி மீண்டும் ஓடிக் கொள்ளலாம் என்பதே ராஜபக்ஷர்களின் எண்ணம்.

குறிப்பாக, ராஜபக்ஷர்களின் சாம்ராஜ்யத்தை கட்டியெழுப்பிய மஹிந்தவின் நோக்கம். ஏனெனில், ராஜபக்ஷர்களின் வரலாறு கோட்டாவோடு முடிந்து போகக்கூடாது என்பது அவரது நிலைப்பாடு. தன்னுடைய மகன் நாமல் ராஜபக்ஷ, அதன் பின்னர் நாமலின் வாரிசு என்று ஆட்சி அதிகார வரலாறு எழுதப்பட வேண்டும் என்று மஹிந்த விரும்புகிறார். அதற்காக, இப்போது, ரணிலை ஆதரிப்பதுதான் அவருக்கு இருக்கும் ஒரே தெரிவு.

ஏனெனில், பொதுஜன பெரமுனவைச் சேர்ந்த இன்னொரு நபர் இடைக்கால ஜனாதிபதியாக பதவிக்கு வந்தால், கட்சி ராஜபக்ஷர்களின் கட்டுப்பாட்டில் இருந்து செல்வதற்கான வாய்ப்புக்கள் உண்டு. அதனைத் தவிர்ப்பதற்கு இன்னொரு கட்சியின் தலைவரான ரணிலை ஜனாதிபதியாக முன்னிறுத்தி, இரண்டரை ஆண்டுகளைக் கடப்பதுதான் இருப்பதில் சமயோசிதமான வழி.

நாட்டின் பொருளாதார நெருக்கடியை உடனடியாக சீர்செய்ய முடியாது. ஆகவும், இனி வரப்போகும் நாட்களை ஒதுங்கியிருந்து வேடிக்கை பார்ப்பதுதான், தங்கள் மீதான மக்களின் கோபத்தை குறைப்பதற்கான வழி. ஆகவே, அந்த வழிமுறையை சில காலத்துக்கு பின்பற்றுவதில் தவறில்லை என்பதும், அதுதான் தங்களை அரசியலில் காப்பாற்றும் என்பதுமே மஹிந்த தரப்பு ரணிலை ஜனாதிபதியாக முன்னிறுத்துவதில் முடிந்திருக்கின்றது. இன்று ராஜபக்ஷர்களும் ரணிலும் சந்தர்ப்பங்களைப் பயன்படுத்தி ஆதாயங்களை அடைந்திருக்கிறார்கள். ஆனால், போராடி மக்களின் எதிர்பார்ப்போ ஏதுமறிய திக்குத் திசையில் உழலத் தொடங்கியிருக்கின்றது.

சென்னை

மாநிலத்தில் சுயாட்சி;

# மத்தியில் கூட்டாட்சி தான் திராவிட மொடல்

## தமிழக முதலமைச்சர் ஸ்டாலின்

'மாநிலத்தில் சுயாட்சி; மத்தியில் கூட்டாட்சி தான் திராவிட மொடலின் இலக்கணம். இதை கடைப்பிடிக்க வேண்டும்' என, திராவிட முன்னேற்றக் கழக (தி.மு.க) தொண்டர்களுக்கு, முதலமைச்சர் ஸ்டாலின் கடிதம் எழுதி உள்ளார்.



அவரது கடிதத்தில் பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது: என் இளமை பருவத்தில், கோபாலபுரம் இளைஞர் தி.மு.க என்ற அமைப்பைத் தொடக்கினேன். 1980இல் ஜூலை 20இல், மதுரை ஜான்சிராணி பூங்காவில், கருணாநிதியால் இளைஞரணி அமைப்பு உருவாக்கப்பட்டது. இளைஞரணி தொடங்கி 42 ஆண்டுகள் கடந்துள்ள நிலையில், தற்போது அதை உதயநிதி சிறப்பாக முன்னெடுத்து வருவதைக் கண்டு, தந்தையாக அல்லாமல் கட்சியின் தலைவராக மகிழ்கிறேன்.

காலத்துக்கும் களத்துக்கும் ஏற்ற வகையில், அதன் செயற்பாடுகள் தொடர வேண்டும் என, விரும்புகிறேன்.

கட்சிக் கட்டிக் காக்கும் பல்வேறு துணை அமைப்புகளுடன், இளைஞரணி தன் பணியைத் தொடர்ந்து மேற்கொள்ள வேண்டும். மாநிலத்தில் சுயாட்சி, மத்தியில் கூட்டாட்சி தான் திராவிட மொடலின் இலக்கணம். இதை கடைப்பிடித்து, அனைவருக்கும் அனைத்தும் என்ற உன்னத இலட்சியத்தை கட்டிக் காக்க வேண்டும். இவ்வாறு ஸ்டாலின் கடிதத்தில் குறிப்பிட்டடுள்ளார்.

சென்னை



# ஏ.ரி.எம் கார்ட்களை திருடி பணம் சுருட்டியவர் கைது

ஏ.ரி.எம்., கார்ட்களை திருடி, பணத்தைச் சுருட்டியவரை, பொலிஸார் கைது செய்தனர். சென்னை, ஆரிக்கம்பேடைச் சேர்ந்தவர் தீபா (வயது23). இவர், பத்தாம் திகதி காலை, முகப்பேர் சாலையிலுள்ள தனியார் வங்கி ஏ.ரி.எம்மில், கார்டை பயன்படுத்தி, 10 ஆயிரம் ரூபாய் எடுத்துச் சென்றார்.

அதன் பிறகு, அவரது ஏ.ரி.எம் கார்டை பயன்படுத்தி, 79 ஆயிரம் ரூபாய் எடுக்கப்பட்ட குறுந்தகவல், அவரது அலைபேசிக்கு வந்தது. அதிர்ச்சியடைந்த அவர், ஏ.ரி.எம்., கார்டை தேடிய போது, அது காணாமல் போனது தெரிந்தது. உடனே, வங்கி வாடிக்கையாளர் சேவை வாயிலாக கார்ட்டின் செயற்பாட்டை முடக்கிவிட்டு, பொலிஸில் முறைப்பாடு செய்தார்.

பொலிஸார் விசாரித்ததில், நேற்று முன்தினம் (19), கொரட்டூரைச் சேர்ந்த சுரேஷ் (வயது 31) என்பவர் சிக்கினார். அவரிடம் நடத்திய விசாரணையில், பெரும்பாலானோர் 'வைபை' வசதியுள்ள ஏ.டி.எம் கார்ட்களை பயன்படுத்துகின்றனர். மேலும், அவர்கள் அலைபேசியில் பேசிக் கொண்டே பணம் எடுத்துக் கொண்டு, கவனக்குறைவாக கார்டை எடுக்காமல் சென்றுவிடுகின்றார்கள். அதை நோட்டமிட்டு ஏ.ரி.எம் கார்ட்களை திருடியுள்ளார்.

'வைபை' வசதி கொண்ட கார்ட் என்பதால், அவற்றின் இரகசிய எண் தெரியாவிட்டாலும், ஏ.ரி.எம்மில் பணம் எடுத்ததுடன், வணிக வளாகம், ஹோட்டல்களில் தனக்கு தேவையான விலை உயர்ந்த பொருட்களை கார்ட் வாயிலாக வாங்கியுள்ளமை தெரியவந்தது. அவரிடமிருந்து, 20 ஏ.ரி.எம் கார்ட்கள், 4,000 ரூபாய், மோட்டார் சைக்கிள் ஆகியவற்றை பறிமுதல் செய்தனர்.

ஜம்மு

# பாக் தீவிரவாதிகள் எழுவர் கைது

ஜம்மு பொலிஸாரால், தடை செய்யப்பட்ட மற்றும் பாகிஸ்தானை அடிப்படையாக கொண்டு செயல்படும் 3 லஷ்கர் பயங்கரவாத அமைப்புகள் கண்டறியப்பட்டு அதனுடன் தொடர்புடைய 7 பயங்கரவாதிகளை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

பாகிஸ்தானில் இருந்து டிரோன்கள் வழியே ஆயுத கடத்தல்கள் நடைபெறுகிறது என கிடைத்த தகவலை அடுத்து, ஜம்மு மற்றும் காஷ்மீரில் பொலிஸார் உதவியுடன் தேசிய புலனாய்வு முகமை பல்வேறு இடங்களில் அதிரடி சோதனைகளை நடத்தி வருகிறது.

இதுபற்றி ஜம்மு வலய மேலதிக கூடுதல் டி.ஜி.பி. முகேஷ் சிங் கூறும்போது, காஷ்மீரில் உள்ள சிறுபான்மை சமூகம் மற்றும் அரசியல் தலைவர்களை இலக்காக கொண்டு தாக்குதல் நடத்த, திட்டமிட்ட பயங்கரவாதிகள் பணிக்கப்பட்டுள்ளனர்.

ஜம்முவின் மலைப்பாங்கான பகுதியில் பயங்ரவாதம் வளர பாகிஸ்தான் மேற்கொண்ட சதி திட்டம் தவிர வேறெதுவுமில்லை. பாகிஸ்தானிடம் இருந்து டிரோன்கள் வழியே 14 முறை ஆயுத கடத்தல்கள் நடத்தப்பட்டு உள்ளன என்றும் தொடர்ந்து விசாரணை நடந்து வருகிறது என்றும் அவர் கூறினார்.

பெங்களூரு

# வெள்ளி இறகுக் கிளியை கண்டுபிடித்தால் ரூ.50 ஆயிரம்

கர்நாடக மாநிலம் துமகூரில் உள்ள ஜெயநகரைச் சேர்ந்தவர் அர்ஜுன்-ரஞ்சனா தம்பதியினர், தங்களுடைய கிளியைக் கண்டு பிடித்துத் தருபவர்களுக்கு ரூ.50 ஆயிரம் பரிசு வழங்கப்படும் என்றும் அறிவித்துள்ளனர்.

கடந்த 3 ஆண்டுகளாக ஆப்பிரிக்கன் வகையை சேர்ந்த ஒரு ஜோடி கிளிகளை வளர்த்து வந்ததுடன், வருடாந்தம் கிளிகளுக்கு பிறந்தநாளும் கொண்டாடி வந்தனர்.

கடந்த 16ஆம் திகதி காணாமல் போன ஆண் கிளியொன்று பல இடங்களிலும் தேடியும் கிடைக்கவில்லை.

இதனையடுத்து, அவர்கள் கிளியின் படத்துடன் பதாகைகள் வைத்தும், துண்டு பிரசுரம் விநியோகித்தும் வருகிவதுடன், கிளியை கண்டுபிடித்து தருபவர்களுக்கு பணப்பரிசையும் அறிவித்துள்ளனர்.

கடந்த 4 நாட்களாக தம்பதியினர் இரவு, பகலாக கிளியை தேடி வருகிறார்கள். ஆனால் இன்னும் கிளியை பற்றி அவர்களுக்கு தகவல் கிடைக்கவில்லை. ஆண் கிளி மாயமானதால், பெண் கிளி கூண்டுக்குள் தவித்து வருகிறத . குறித்த தம்பதியினர் வளர்த்துவந்த ஆப்பிரிக்க சாம்பல் கிளிகள் மத்திய ஆப்பிரிக்காவின் மழைக்காடுகளை பூர்வீகமாகக் கொண்டவை. இவை ஆப்பிரிக்க கண்டம் முழுவதும் பரவியுள்ளன. கிளி வகைகளில் மிகப்பெரியது என்று தெரிவிக்கப்படுகிறது.



வெள்ளி இறகுகள், ஒரு வெள்ளை முகம், சிவப்பு நிற வால் கொண்டுள்ள குறித்த கிளி இனம், ஏனைய கிளி இனங்களை விட பிரகாசமான இறகுகளை கொண்டுள்ளன. குறிப்பாக 5 வயது குழந்தைக்கு சமமான அறிவாற்றல் இவைகளுக்கு இருப்பதாக ஆராய்ச்சிகள் காட்டுகின்றமை குறிப்பிடத்தக்கது.

டெல்லி

# உலக பணக்காரர் பட்டியலில் கௌதம் அதானி 4ஆம் இடம்

போர்ப்ஸ் பத்திரிக்கை வெளியிட்டுள்ள உலகின் மிகப் பெரிய பணக்காரர்கள் பட்டியலில் இந்தியாவின் கௌதம் அதானி மைக்ரோசாப்ட் நிறுவனர் பில் கேட்ஸை பின் தள்ளி 4ஆவது இடத்துக்கு முன்னேறியுள்ளார்.

கடந்த வாரம் பில் கேட்ஸ் தனது சொத்துக்களில் 20 பில்லியன் டொலர்களை அறக்கட்டளை நிறுவனமான பில் மற்றும் மெலிண்டா கேட்ஸ் அறக்கட்டளைக்கு நன்கொடையாக வழங்குவதாகக் கூறினார்.

இதைத் தொடர்ந்து, கௌதம் அதானி மற்றும் குடும்பம், போர்ப்ஸ் பணக்காரர்கள் பட்டியலில் 115 பில்லியன் டொலர் சொத்துக்களுடன் 4ஆவது இடத்துக்கு முன்னேறியுள்ளதுடன், பில் கேட்ஸ் 5ஆவது இடத்தில் உள்ளார்.

இந்த பட்டியலில் டெஸ்லா மற்றும் ஸ்பேஸ் எக்ஸ் நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி எலான் மஸ்க் 230 பில்லியன் டொலர் மதிப்புடன் முதலிடத்திலும் பெர்னால்ட் அர்னால்டு இரண்டாவது இடத்திலும், அமேசானின் ஜெப் பெசோஸ் 3ஆவது இடத்திலும் உள்ளனர்.

இந்திய கோடீஸ்வர வர்த்தகரான ரிலையன்ஸ் நிறுவனர் முகேஷ் அம்பானி இந்த பட்டியலில் 10ஆவது இடத்தில் உள்ளார்.





## நாட்டின் மிகவும் புதுமையான நிறுவனங்கள் மற்றும் தனிநபர்களை கௌரவிக்கிறது

# SLASSCOM-இன் National Ingenuity விருதுகள் 2022

இலங்கை மென்பொருள் சேவை நிறுவனங்களின் சங்கம் (SLASSCOM), நாடு முழுவதிலுமிருந்து 35 மாகாண மற்றும் 24 தேசிய வெற்றியாளர்களின் சில சிறந்த கண்டுபிடிப்புகளைக் கொண்டாடும் வகையில், 2022 ஜூலை 1 ஆம் திகதி National Ingenuity விருதுகளின் இறுதிப் போட்டியை நடத்தியது.

சிறந்த உலகளாவிய சேவைகள்/பிபிஎம் உள்ளிட்ட பல பிரிவுகளில் இருந்து இந்த ஆண்டுக்கான தேசிய வெற்றியாளர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். சிறந்த உலகளாவிய சேவைகள்/ BPM மாற்றம் பிரிவில் HSBC வென்றது, CDBஆனது மிகவும் புதுமையான உலகளாவிய வணிக சேவை/ BPMக்கான விருதை வென்றது.

OREL IT ஆனது சிறந்த உலகளாவிய வணிகச் சேவை/ BPM தொழில்முனைவோர் மற்றும் சிறந்த உலகளாவிய வணிகச் சேவைகள்/ பிராந்திய விரிவாக்கத்திற்கான BPM ஆகிய இரண்டிற்கும் விருதுகளை வென்றது. IT/BPM துறையில் சிறந்த UN17 SDG முன்முயற்சி/ மென்பொருள் தீர்வுக்கான பட்டம் ExamHUB இலங்கைக்கு வழங்கப்பட்டது. சிறந்த Disruptive Product Innovation மற்றும் சிறந்த கிளையண்ட் டெலிவரி கண்டுபிடிப்பு பிரிவுகள் இரண்டையும் CICRA வென்றது.

> **நிகழ்வுக்கு ஏற்றுமதி அபிவிருத்திச் சபை (EDB) வலுவான ஆதரவை வழங்கியது இலங்கை முதலீட்டுச் சபை (BOI) மற்றும் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப நிறுவனம் (ICTA) ஆகியவை நிகழ்வின் தேசிய பங்காளிகளாக இருந்தன.**

உள் செயல்முறைகள், தொழில்நுட்பம் அல்லது கட்டமைப்பில் சிறந்த கண்டுபிடிப்பு பிரிவில் VizuaMatrix வெற்றிப்பெற்றது. அதே நேரத்தில் Magicbit விருதை வென்றதுடன் இந்த ஆண்டின் சிறந்த ஸ்டார்ட்-அப் என்ற அங்கீகாரத்தைப் பெற்றது.

இந்த ஆண்டின் வளர்ந்து வரும் பெண் தொழில்நுட்பக் கலைஞர் என்ற பட்டத்தை CareerMeக்காக அஞ்சனா குலசேகர பெற்றார். ஐஐடி சிறந்த புதுமையான தயாரிப்பு / திட்டம் - பல்கலைக்கழகம், சிறந்த புதுமையான தயாரிப்பு / திட்டம் மியூசியஸ் கல்லூரி வென்றது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக, அமெரிக்க இராஜதந்திரியும் தற்போது USAID இலங்கை மற்றும் மாலைத்தீவின் செயல் துணைப் பணிப்பாளருமான சட்டத்தரணி Ali Ezzatyar கலந்துகொண்டு SLASSCOM-இன் National Ingenuity விருதுகள் பற்றி பாராட்டினார்.

"இலங்கை அதிக ஆற்றல் கொண்ட நாடு. SLASSCOM அதன் ICT துறையை மாற்றியமைப்பதில் முக்கிய பங்கு வகித்துள்ளது. நாட்டின் வருமானம் மற்றும் பொருளாதார வளர்ச்சியை அதிகரிக்க உதவுவதுடன், பெண்கள் மற்றும் இளைஞர்களுக்கு பல வேலை வாய்ப்புகளை வழங்குகிறது. எதிர்கால தொழில் பாலம் போன்ற திட்டங்களில் யு லீட் மூலம் நாங்கள் பங்காளியாக இருக்கும் இலங்கையின் திறனை அமெரிக்கா பார்க்கிறது. இலங்கையின் பொருளாதாரத்தை முன்னோக்கி நகர்த்துவதற்கு உள்நாட்டு புத்தாக்கத்தை அபிவிருத்தி செய்வது அவசியமானது. National Ingenuity விருதுகள் போன்ற நிகழ்வுகள் இதை நிறைவேற்ற வழி வகுக்கும். இலங்கையின் பிரகாசமான துறைகளை பிரதிநிதித்துவப்படுத்தும் அனைத்து விருது வென்றவர்களையும் நாங்கள் வாழ்த்துகிறோம்" என்றார்.

இந்த விருது நிகழ்வின் முக்கியத்துவம் பற்றி உரையாற்றிய SLASSCOM இன் தலைவர் சாண்ட்ரா டி சொய்சா, "SLASSCOM ஆனது எப்போதும் IT/BPM துறையின் முக்கிய இயக்கிகளான புதுமை மற்றும் தொழில்முனைவுகளை வளர்த்து வருகிறது. நிலையான பொருளாதார வளர்ச்சிக்கு வழிவகுக்கும்? வெளிநாட்டு வருவாயை ஈட்ட உதவும் புதுமை, தற்போது நம் நாட்டிற்கு மிகவும் தேவைப்படுகிறது. எனவே, இந்த நிகழ்வு நமது தேசத்தின் கண்டுபிடிப்பாளர்கள் மற்றும் தொழில்முனைவோர்களின் கடின உழைப்பைக் கௌரவிப்பதாகும். இந்த அங்கீகாரம் உங்களது சாதனைகளின் சான்றாக உங்கள் வாடிக்கையாளர்களுக்கும் முதலீட்டாளர்களுக்கும் நீங்கள் பெருமைப்பட்டுக் கொள்ளக்கூடிய ஒன்றாகும்" என்றார்.

தொடர்ந்து இதனை பற்றி SLASSCOM தொழில் முனைவோர் மற்றும் புத்தாக்க மன்றத்தின் இயக்குநர் சம்பத் ஜெயசுந்தர விளக்கினார், "SLASSCOM National Ingenuity விருதுகள் அனைத்து பாடசாலைகள், பல்கலைக்கழக மட்டம் மற்றும் தொழில்துறை கண்டுபிடிப்புகளை அங்கீகரிக்கும் ஒரு தளமாகும், மேலும் இது SLASSCOM நாட்காட்டியின் மிக முக்கியமான நிகழ்வுகளில் ஒன்றாகும். . வெற்றியாளர்களுக்கு வாழ்த்து தெரிவிக்கும் அதே வேளையில், இந்த கண்டுபிடிப்பாளர்கள் தங்கள் கண்டுபிடிப்புகளை உலக அளவில் கொண்டு செல்ல ஊக்குவிக்கிறோம், அதனால் நாடு நீண்ட காலத்திற்கு பயனடையும்" என்றார்.

இந்த கருத்துக்களை ஆமோதித்த பிராந்திய அபிவிருத்தி மன்றத்தின் ஸ்லாஸ்காம் பணிப்பாளர் திலான் ராஜபக்ஷ, நாட்டின் அனைத்து மாகாணங்களில் இருந்தும் அதிகளவான பங்கேற்பைக் காண்பதில் மகிழ்ச்சியடைவதாக குறிப்பிட்டார். அத்துடன், புதுமை கண்டுபிடிப்புகள் மாகாண மற்றும் தேசிய அளவில் அங்கீகரிக்கப்பட்டு கொண்டாடப்படுவதாக சுட்டிக்காட்டினார்.

நிகழ்வுக்கு ஏற்றுமதி அபிவிருத்திச் சபை (EDB) வலுவான ஆதரவை வழங்கியது இலங்கை முதலீட்டுச் சபை (BOI) மற்றும் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப நிறுவனம் (ICTA) ஆகியவை நிகழ்வின் தேசிய பங்காளிகளாக இருந்தன.

Wiley Global Innovation Sponsor ஆகவும், Axiata Digital Labs, Pearsons மற்றும் EYGDS பிளாட்டினம் ஸ்பான்சர்களாகவும், லண்டன் ஸ்டாக் எக்ஸ்சேஞ்ச் குரூப் மற்றும் Hayleys Advantis கோல்ட் ஸ்பான்சர்களாகவும், RR Donnelly சில்வர் ஸ்பான்சராகவும் இருந்தனர்.

Price Waterhouse Coopers (PW)செயல்முறை ஆளுமை ஸ்பான்சராகவும், இன்டர்நேஷனல் ஃபைனான்ஸ் கார்ப்பரேஷன் (IFC) தொழில்நுட்பப் பங்காளராகவும் இந்த நிகழ்வில் பங்குதாரர்களாக இணைந்திருந்தனர்.

SLASSCOM, டெக்கிட்ஸ் போன்ற மதிப்பு சார்ந்த திட்டங்களின் ஆரம்பித்து சிறுவர்களுககு குறியீடுகளை (codeing) கற்றுக்கொடுக்கிறது. Hack like a girl என்பது நாட்டின் முதல் மற்றும் பெண்களுக்கான ஒரே ஹேக்கத்தான் ஆகும். அத்துடன், இந்த ஆண்டுக்கான National Ingenuity விருதுகள், இலங்கையின் மிகவும் புதுமையான நிறுவனங்கள் மற்றும் தனிநபர்களின் திறமைகளைப் பயன்படுத்துவதில் SLASSCOM ஆற்றிய முக்கிய பங்கை வெளிப்படுத்தியுள்ளது.

> **நிகழ்வுக்கு ஏற்றுமதி அபிவிருத்திச் சபை (EDB) வலுவான ஆதரவை வழங்கியது இலங்கை முதலீட்டுச் சபை (BOI) மற்றும் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப நிறுவனம் (ICTA) ஆகியவை நிகழ்வின் தேசிய பங்காளிகளாக இருந்தன.**

> **சிறந்த உலகளாவிய சேவைகள்/பிபிஎம் உள்ளிட்ட பல பிரிவுகளில் இருந்து இந்த ஆண்டுக்கான தேசிய வெற்றியாளர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். சிறந்த உலகளாவிய சேவைகள்/ BPM மாற்றம் பிரிவில் HSBC வென்றது, CDBஆனது மிகவும் புதுமையான உலகளாவிய வணிக சேவை/ BPMக்கான விருதை வென்றது.**

லண்டன்

# குடியிருப்புகளை கொளுத்தும் வெயில்

பிரித்தானியாவில் அண்மைக்காலமாகக் கடுமையான வெப்ப நிலை நிலவி வருகின்றது.
குறிப்பாக லண்டனில் 40 பாகை செல்சியஸ்ஸுக்கும் அதிகமாக வெப்பநிலை காணப்படுவதாகக் கூறப்படுகின்றது.
இந்நிலையில் நிலவும் உட்சபட்ச வெப்பத்தால் கிழக்கு லண்டன் வென்னிங்டன் நகரில் உள்ள சில குடியிருப்புகள் தீப்பற்றி எரிந்ததாக்கக் கூறப்படுகின்றது. இதனையடுத்து தேசிய அவசரநிலை அறிவிக்கப்பட்டு ரயில் சேவைகள் இரத்து செய்யப்பட்டதால் வெயிலின் உஷ்ணத் தில் சிக்கி மக்கள் திண்டாடி வருகின்றனர் எனவும் அண்டை நகரங்களுக்குக் கூட நகர முடியாமல் தவித்து வருகின்றனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.






சிலி

## காலடித் தடங்கள் கண்டுபிடிப்பு

தென் அமெரிக்க நாடான சிலியில் நூற்றுக்கணக்கான டைனோசர் காலடித் தடங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.
வடக்கு சிலியின் ஹுடாகோண்டோவில் (Huatacondo) 30 சதுர கிலோமீற்றர் பரப்பளவில் 150 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்த இளம் மற்றும் முதிர்ந்த டைனோசர்கள் விட்டுச் சென்ற ஆயிரத்துக்கும் மேற்பட்ட காலடித் தடங்களை ஆய்வாளர்கள் கண்டறிந்துள்ளனர்.

ஜப்பான்

## ஊழியர்கள் தூங்கலாம்



ஊழியர்கள் தங்களது பணி நேரத்தில் ஓய்வெடுக்கும் வகையில் KaminBox(கமின் பொக்ஸ்) என்ற தூங்கும் பெட்டியை ஜப்பானைச் சேர்ந்த நிறுவனமொன்று உருவாக்கியுள்ளது.
தூக்கமின்றி அதிகநேரம் பணிபுரிபவர்கள் ஏராளமான உடல் மற்றும் மன ரீதியான சிக்கல்களை எதிர்கொள்வதாக மருத்துவ நிபுணர்கள்
எச்சரித்து வரும் நிலையில் தமது ஊழியர்களின் நலன் கருதி 'இடோகி கொயோஜு ப்ளைவுட் கார்ப்பரேஷன்' என்ற நிறுவனம்
இத் தூங்கும் பெட்டியை உருவாக்கியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.
ஜப்பான் தலைநகர் டோக்கியோவை தலைமையிடமாகக்கொண்டு இயங்கிவரும் இந்த நிறுவனமானது அதிக நேரம் பணிபுரியும் நபர்கள் தங்களது வேலைகளுக்கு இடையே இந்த பெட்டிக்குள் சென்று குட்டித்தூக்கம் போட்டுக்கொள்ளலாம் என தெரிவித்துள்ளது.
இந்நிலையில் இது குறித்துக் கருத்துத் தெரிவித்த அந்நிறுவனத்தின் தகவல் தொடர்பு அதிகாரி சாகோ கவாஷிமா,"பணிநேரங்களில் குட்டித்தூக்கம் போட விரும்புபவர்களுக்கு இந்தப்பெட்டி தீர்வை வழங்குகிறது. ஜப்பானில் பெரும்பாலான பணியாளர்கள் குளியலறைக்கு சென்று கதவை தாழிட்டுக்கொள்வார்கள். உள்ளே அவர்கள் சிறிதுநேரம் தூங்கி எழுந்த பின்னர் தங்களது வேலைகளை தொடர்வார்கள். அது ஆரோக்கியமானதில்லை என்று நான் நினைக்கிறேன். வசதியான இடத்தில் தூங்குவது நல்லது" என்றார்.
மேலும் "வேலை செய்யும் இடங்களில் ஊழியர்களுக்கு ஓய்வு கிடைக்க வேண்டும் " எனக்கூறிய அவர்,"பல ஜப்பானியர்கள் இடைவேளையின்றி தொடர்ந்து வேலை செய்வதால் அவர்கள் ஓய்வெடுப்பதற்கான வசதியான அணுகுமுறையாக இது காணப்படுமெனவும் தெரிவித்துள்ளார்.
இருப்பினும், இப் பெட்டிக்குள் ஊழியர்கள் நின்றபடி மாத்திரமே தூங்க முடியும் என்பது குறிப்பிடத்தக்கது.

செவ்வாய் கிரகம்

## செவ்வாய் கிரகத்தில் எலான் மஸ்க்கின் குழந்தைகள்?

உலகப் பணக்காரர்களின் பட்டியலில் முதல் இடத்தில் உள்ளவரும் டெஸ்லா மற்றும் ஸ்பேஸ் எக்ஸ் நிறுவனங்களின் ஸ்தாபகரும், அதன் தலைமை நிர்வாக அதிகாரியுமான எலோன் மஸ்க் (Elon musk) அண்மையில் தனது பிள்ளைகள் குறித்து தெரிவித்த கருத்துக்கள் ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது.



எலான் மஸ்க்கிற்கு மொத்தமாக 9 பிள்ளைகள் உள்ளனர் எனக் கூறப்படுகின்றது. இந்நிலையில், அமெரிக்காவை சேர்ந்த தொழில்முனைவோரான மார்க் கியூபன், எலான் எலான் மஸ்க்கிடம் வித்தியாசமான கேள்வி ஒன்றை எழுப்பியுள்ளார். அப்போது,"வாழ்த்துக்கள். எத்தனை குழந்தைகள் பெற்றுக்கொள்ள திட்டமிட்டுள்ளீர்கள்?" எனக் கேள்வி எழுப்பியிருந்தார். இதற்கு பதில் அளித்திருக்கும் மஸ்க்,"செவ்வாய் கிரகத்திற்கு மனிதர்கள் தேவை" எனக் குறிப்பிட்டிருக்கிறார். இது பலரையும் திகைப்படைய செய்திருக்கிறது.

**“ பணிபுரியும் ஊழியர்கள் குழந்தைகளை பெற்றுக்கொள்ள ஊக்குவிக்க இருப்பதாகவும், இதற்காக பிரத்யேக திட்டம் அமுலுக்கு வர இருப்பதாகவும் மஸ்க் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.**

முன்னதாக, உலக அளவில் மக்கள்தொகை பெருக்கம் குறைந்துவருவதை மஸ்க் சுட்டிக்காட்டி இது மிகப்பெரிய தாக்கத்தை ஏற்படுத்தக்கூடியது என எச்சரித்திருந்தார். மேலும், தனது நிறுவனங்களில் பணிபுரியும் ஊழியர்கள் குழந்தைகளை பெற்றுக்கொள்ள ஊக்குவிக்க இருப்பதாகவும், இதற்காக பிரத்யேக திட்டம் அமுலுக்கு வர இருப்பதாகவும் மஸ்க் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

இத்தாலி



## 98 வயதில் முதுகலைப் பட்டம்

இத்தாலியைச் சேர்ந்த கியூசெப்பே பேட்டெர்னோ (Giuseppe Paterno) என்பவர், தனது 98 வயதில் முதுகலை பட்டம் பெற்று சாதனை படைத்துள்ளார்.
வறுமை காரணமாக தனது பாடசாலைப் படிப்பை பாதியிலேயே நிறுத்திய பேட்டெர்னோ, கடற்படை, ரயில்வே ஆகியவற்றில் பணிபுரிந்து ஓய்வு பெற்றார்.
எனினும் இளம் வயதில் தவற விட்ட படிப்பை வயதான காலத்தில் மீண்டும் தொடர நினைத்த பேட்டெர்னோ அதற்கான கல்லூரியில் சேர்ந்து, கடந்த 2020-ஆம் ஆண்டு பாலெர்மோ பல்கலைக் கழகத்தில் இளங்கலை பட்டம் பெற்றார்.
இந்நிலையில் வரலாறு மற்றும் தத்துவ பாடப்பிரிவில் தற்போது முதுகலைப் பட்டம் பெற்றுள்ள அவருக்கு பாராட்டுகள் குவிந்து வருகின்றன.

**“ இளம் வயதில் தவற விட்ட படிப்பை வயதான காலத்தில் மீண்டும் தொடர நினைத்தார் பேட்டெர்னோ**

நியூ யோர்க்

## ‘பூம் ‘ நிறுவனம் அதிரடி முயற்சி

உலகின் அதிவேக விமானப் போக்குவரத்துத் திட்டத்தைசெயற்படுத்தும் முயற்சியில் ‘பூம்‘ நிறுவனம் ஈடுபட்டு வருகின்றது.
அந்தவகையில் நியூயோர்க்கில் இருந்து லண்டனுக்கு மூன்றரை மணி நேரத்தில் சென்றடையும் சூப்பர்சோனிக் ஜெட் விமான சேவையை வரும் 2029 ஆம் ஆண்டில் தொடங்கவுள்ளதாக அந்நிறுவனம் அறிவித்துள்ளது.




மேலும் இது குறித்த மேலதிக விபரங்கள் அண்மையில் இடம்பெற்ற ஃபார்ன்பரோ விமான சாகச நிகழ்ச்சியில் வெளியிடப்பட்டன.
அத்துடன் "குறைந்த ஓசை, சிறந்த பணி, குறைந்த கட்டணம் என்பன இவ்விமானங்களின் சிறப்பம்சம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளன.
இந்நிலையில் அந் நிறுவனத்துக்கு இதுவரை யுனைடெட் ஏர்லைன்ஸ், ஜப்பான் ஏர்லைன்ஸ் போன்ற விமான நிறுவனங்களிடமிருந்து 70 விமானங்களுக்கான ஓடர்கள் குவிந்துள்ளன எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முதலாவது டெஸ்டில்

# இலங்கையை வென்ற பாகிஸ்தான்

இலங்கைக்கு எதிரான இரண்டு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில், காலியில் கடந்த சனிக்கிழமை ஆரம்பித்து நேற்று முடிவுக்கு வந்த முதலாவது டெஸ்டில் பாகிஸ்தான் வென்றதுறது.
ஸ்கோர் விவரம்:
நாணயச் சுழற்சி: இலங்கை
இலங்கை: 222/10
(துடுப்பாட்டம்: தினேஷ் சந்திமால் 76, மகேஷ் தீக்ஷன 38, ஒஷாட பெர்ணாண்டோ 35, குசல் மென்டிஸ் 21, தனஞ்சய டி சில்வா 14, கசுன் ராஜித ஆ.இ 12, ரமேஷ் மென்டிஸ் 11 ஓட்டங்கள். பந்துவீச்சு: ஷகீன் ஷா அஃப்ரிடி 4/58, ஹஸன் அலி 2/23, யசீர் ஷா 2/66, நசீம் ஷா 1/53, மொஹமட் நவாஸ் 1/18)
பாகிஸ்தான்: 218/10
(துடுப்பாட்டம்: பாபர் அஸாம் 119 ஓட்டங்கள். பந்துவீச்சு: பிரபாத் ஜெயசூரிய 5/82, ரமேஷ் மென்டிஸ் 2/18, மகேஷ் தீக்ஷன 2/68, கசுன் ராஜித 1/42)
இலங்கை: 337/10




(துடுப்பாட்டம்: தினேஷ் சந்திமால் ஆ.இ 94, குசல் மென்டிஸ் 76, ஒஷாட பெர்ணாண்டோ 64, ரமேஷ் மென்டிஸ் 22, தனஞ்சய டி சில்வா 20, திமுத் கருணாரத்ன 16, நிரோஷன் டிக்வெல்ல 12, மகேஷ் தீக்ஷன 11 ஓட்டங்களைப் பெற்றனர். பந்துவீச்சில், மொஹமட் நவாஸ் 5/88, யசீர் ஷா 3/122, ஹஸன் அலி 1/19, நசீம் ஷா 1/24)
பாகிஸ்தான்: 342/6
(துடுப்பாட்டம்: அப்துல்லாஹ் ஷஃபிக் ஆ.இ 158, பாபர் அஸாம் 55, மொஹமட் றிஸ்வான் 40, இமாம்-உல்-ஹக் 35 ஓட்டங்கள். பந்துவீச்சு: பிரபாத் ஜெயசூரிய 4/133, தனஞ்சய டி சில்வா 1/33, ரமேஷ் மென்டிஸ் 1/102)
போட்டியின் நாயகன்: அப்துல்லாஹ் ஷஃபிக்



முதலாவது ஒருநாள் சர்வதேசப் போட்டியில்

## இங்கிலாந்தை வீழ்த்திய தென்னாபிரிக்கா

இங்கிலாந்துக்கெதிரான முதலாவது ஒருநாள் சர்வதேசப் போட்டியில் தென்னாபிரிக்கா வென்றது.
மூன்று போட்டிகள் கொண்ட இத்தொடரில், செஸ்டர்-லீ-ஸ்றீட்டில் நேற்று முன்தினம் நடைபெற்ற குறித்த போட்டியின் நாணயச் சுழற்சியில் வென்ற தென்னாபிரிக்காவின் பதிலணித்தலைவர் கேஷவ் மஹராஜ், தமதணி முதலில் துடுப்பெடுத்தாடும் என அறிவித்தார்.
அந்தவகையில் முதலில் துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்கா, றஸி வான் டர் டுஸனின் 134 (117), ஜனமென் மலனின் 57 (77), ஏய்டன் மார்க்ரமின் 77 (61) ஓட்டங்களோடு 50 ஓவர்களில் 5 விக்கெட்டுகளை இழந்து 333 ஓட்டங்களைப் பெற்றது. பந்துவீச்சில், லியாம் லிவிங்ஸ்டோன் 2 மற்றும் பிறைடன் கார்ஸ், மொயின் அலி, சாம் கர்ரன் ஆகியோர் தலா ஒவ்வொரு விக்கெட்டை வீழ்த்தினர்.
பதிலுக்கு, 334 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து சிறப்பான ஆரம்பத்தைப் பெற்றபோதும் மஹராஜ், மார்க்ரம் (2), தப்ரையாஸ் ஷம்சி (2), லுங்கி என்கிடி, அன்றிச் நொர்ட்ஜேயிடம் (4) குறிப்பிட்ட இடைவெளிகளில் விக்கெட்டுகளைப் பறிகொடுத்து 46.5 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 271 ஓட்டங்களையே பெற்று 62 ஓட்டங்களால் தோல்வியடைந்தது. துடுப்பாட்டத்தில், ஜோ றூட் 86 (77), ஜொனி பெயார்ஸ்டோ 63 (71), ஜேஸன் றோய் 43 (62) ஓட்டங்களைப் பெற்றனர்.
இப்போட்டியின் நாயகனாக வான் டர் டுஸன் தெரிவாகினார்.

எப்.எஸ்.கே மியன்டாட் பிறீமியர் லீக்:

## சம்பியனானது பொலி லயன்ஸ்

எம்.என்.எம். அப்ராஸ்

சாய்ந்தமருது மியண்டாட் விளையாட்டுக் கழகத்தின் எப்.எஸ்.கே. மியன்டாட் பிறீமியர் லீக் கடினபந்து கிரிக்கெட் தொடரில் பொலி லயன்ஸ் சம்பியனானது.
சாய்ந்தமருது பொது விளையாட்டு மைதானத்தில் அண்மையில் நடைபெற்ற இறுதிப் போட்டியில் மாளிகா யுனைட்டெட்டை வென்றே லயன்ஸ் சம்பியனானது.
இப்போட்டியின் நாணயச் சுழற்சியில் வென்ற லயன்ஸ் முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது.
அந்தவகையில், முதலில் துடுப்பெடுத்தாடி எட்டு ஓவர்களில் 2 விக்கெட்டுகளை இழந்து 75 ஓட்டங்களை லயன்ஸ் பெற்றது.
பதிலுக்கு 76 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய யுனைட்டெட் எட்டு ஓவர்களில் 3 விக்கெட்டுகளை இழந்து 65 ஓட்டங்களையே பெற்று 10 ஓட்டங்களால் தோல்வியடைந்தது.





இறுதிப் போட்டியின் நாயகனாக லயன்ஸின் என்.எல்.எம். சாஹிர், தொடரின் நாயகனாக மற்றும் அதிகூடிய ஓட்டங்களைப் பெற்றவராக மருதூர் வொரியர்ஸின் எஸ்.எல். மனாஸ், தொடரின் அதிகூடிய விக்கெட்டுக்களை கைப்பற்றியவராக யுனைட்டெட்டின் ஏ.பி.எம். பைஸால் ஆகியோர் தெரிவாகினர்.
தவிர தொடரின் அதிகூடிய ஆறு ஓட்டங்களை பெற்றவராக சாந்தம் சலஞ்சர்ஸின் ஏ.எச்.எம். முர்ஸித், தொடரின் அதிகூடிய நான்கு ஓட்டங்களைப் அதேயணியின் யு.எல்.எம். ஆஷிக், தொடரின் வளர்ந்து வரும் அதேயணியின் என்.எம். ஹைஸ் ஆகியோரும் தெரிவாகினர்.










## நெய்மரை நிராகரித்த சிற்றி

இங்கிலாந்து பிறீமியர் லீக் கால்பந்தாட்டக் கழகமான மன்செஸ்டர் சிற்றியின் மத்தியகளவீரரான பெர்ணார்டோ சில்வாவைக் கைச்சாத்திடுவதற்குப் பதிலாக தமதணியின் முன்களவீரரான நெய்மரை வழங்க பிரெஞ்சு லீக் 1கழகமான பரிஸ் ஸா ஜேர்மைன் முன்வந்ததை சிற்றி நிராகரித்துள்ளது.
ஸ்பானிய லா லிகா கழகமான பார்சிலோனாவாலும் 27 வயதான சில்வா வேண்டப்படுகையில் அவரைத் தக்க வைக்க சிற்றி முயலுகின்றமை குறிப்பிடத்தக்கது.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் வியாழக்கிழமை, 21 ஜூலை 2022, இல. 8, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு 02 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.